இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 228 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 16 – வெள்ளிக்கிழமை 29 மார்ச் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 228 : Thiruvalluvar Year - 2055 - Panguni 16 - Friday 29 March 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## மாநில உரிமைகளைப் பறித்து

# தமிழ்நாட்டை வஞ்சிப்போரையும் - பாழ்படுத்தியோரையும் வீழ்த்திடுவீர்!

## விருதுநகர், தென்காசி வேட்பாளர்களை ஆதரித்து கிருஷ்ணன் கோயிலில் நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு வேண்டுகோள்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.3.2024) விருதுநகர் மாவட்டம், கிருஷ்ணன்கோயிலில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் விருதுநகர் வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அவர்களையும், தென்காசி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மூர்த்தி, மாவட்ட கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, ஜெயபாலன், மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கபாண்டியன், பழனி நாடார், அசோகன், ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார் உள்ளிட்ட முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

விருதுநகர், மார்ச் 29–

**“வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் “மாநில உரிமைகளைப் பறித்து தமிழ்நாட்டை வஞ்சிப் போரையும் – பாழ்படுத்தியோரையும் வீழ்த்து வீர்” என்று விருதுநகர், தென்காசி வேட்பாளர் களை ஆதரித்து கிருஷ்ணன் கோயிலில் நடை பெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருக்கமிகு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருதுநகர் மாவட்டம் கிருஷ்ணன் கோயிலில் நேற்று முன்தினம் (27.3.2024) நடைபெற்ற மக்களவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில், தென்காசி மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், விருதுநகர் மக்களவைத் தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் மாணிக்கம் தாகூர் ஆகியோருக்கு வாக்கு கேட்டு எழுச்சியுரை ஆற்றினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–

இயற்கை எழில் கொஞ்சும் திருக்குற்றால வனப்பரப்புக்கு நான் இன்றைக்கு வந்திருக்கிறேன்! தென்றல் வீசும், தென்காசிக்கும் வீரத்தின் விளைநிலமான விருதுநகருக்கும் வந்திருக்கிறேன்!

வீரத்தின் அடையாளமான, புலித்தேவன் மண் இது! மாவீரன் ஒண்டிவீரன் பிறந்த மண் இது! கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் பிறந்த மண் இது! இப்படிப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் பிறந்த மண்ணில், பாசிசத்தை எதிர்த்தும் சர்வாதிகாரத்தில் இருந்து விடுபடவும், நாம் நடத்த இருக்கும் இரண்டாவது விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு கட்டியம் கூறும், இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

### ஆற்றல்மிகு மருது சகோதரர்கள்!

இந்தத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தையே, தென் மண்டல மாநாடுபோல் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திராவிட இயக்கத்தின் ஆற்றல்மிகு செயல்வீரர்கள் மருது சகோதரர்கள் என என்னால் அன்போடு அழைக்கப்படும், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களுக்கும் – சகோதரர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும் இந்த இரண்டு தொகுதிகளையும் உள்ளடக்கிய பொறுப்பு அமைச்சர்கள், மாவட்டக் கழகங்களின் செயலாளர்களுக்கும் – நிர்வாகிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்காசி தொகுதி வேட்பாளராகப் போட்டியிடும் ராணி ஸ்ரீகுமார் அவர்கள் மருத்துவர். அரசு மருத்துவராகப் பணியாற்றிய இவர், மக்களுக்குத் தொண்டாற்ற, தன்னுடைய அரசுப் பணியிலிருந்து விலகிவிட்டு, தேர்தல் களத்திற்கு வந்திருக்கிறார். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அவர்கள், ஏற்கனவே உங்களுக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டவர். நாடாளுமன்றத்திலும், தொலைக்காட்சி விவாதங்களிலும் தெளிவாகத் தன்னுடைய வாதங்களை வைத்து, மக்களுக்காகக் குரல் எழுப்புபவர். எய்ம்ஸ் மருத்துவமனையை 70 விழுக்காடு கட்டி முடித்துவிட்டோம் என்று, பா.ஜ.க. தலைவர் நட்டா கூறியபோது, அந்த இடத்திற்கே சென்று கட்டாந்தரையாகத்தான் இருக்கிறது என்று பா.ஜ.க. பொய்யை அம்பலப்படுத்திய நம்முடைய காங்கிரஸ் கட்சியின் வெற்றி வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அவர்களுக்குக் கை சின்னத்திலும் வாக்களிக்க வேண்டும்!

### மக்களிடம் மாபெரும் எழுச்சி!

திருச்சியில் தொடங்கிய என்னுடைய பயணத்தில், இன்றோடு பத்து நாடாளுமன்றத் தொகுதியைக் கடக்கிறேன். இந்தப் பத்து தொகுதிகளிலும், நான் பயணம் செய்யும் போது, மக்களிடம் மாபெரும் எழுச்சியைப் பார்க்கிறேன்! முக்கியமாக, தாய்மார்களின் முகங்களில் மகிழ்ச்சியைப் பார்க்கிறேன்!

நான் காலை நடைப்பயிற்சியில் வாக்கு சேகரிக்கும்போது அன்போடும், உரிமையோடும் என்னை வரவேற்று, எங்களின் வாக்கு உதயசூரியனுக்குத்தான் – இந்தியா கூட்டணிக்குத் தான் என்று சொல்லும்போது, நாற்பதுக்கு நாற்பது நாங்கள்தான் என்ற உறுதி கிடைத்திருக்கிறது! போகும் இடங்களில் எல்லாம் – அலை அலையாய் வந்து ஆதரவு தெரிவிக்கும் மக்கள்தான், நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகளுக்கான அடையாளம்!

சாதனைகள் என்றால் எப்படிப்பட்ட சாதனைகள்? தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது ஒரு திட்டத்தால் நிச்சயமாக நேரடியாகப் பயன்பெறும் மாதிரியான திட்டங்களாக நம்முடைய திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்! ஒரு குழந்தை பிறந்து, வளர்ந்து, படித்து, வேலைக்குச் செல்லும் வரைக்கும், ஒரு தாயைப்போல் பாதுகாக்கும் – தந்தையைப்போல் அரவணைக்கும் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், பெருந்தலைவர் காமராசர் அடியொற்றியும், திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரு சம்பவம் சொல்லுவார்கள், பெருந்தலைவர் காமராசர் ஒருமுறை காரில் சென்று கொண்டிருந்தபோது, விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைச் சந்தித்தாராம். “இன்றைக்குப் பள்ளிக்கு செல்லவில்லையா? என்று கேட்டிருக்கிறார். குடும்பத்தில் உணவுக்கே வழியில்லாததால் எங்கள் அப்பா அம்மா பள்ளிக்கு அனுப்பவில்லை என்று அந்தச் சிறுவர்கள் சொல்லவும், பள்ளியில் மதிய உணவு அளித்தால் அதற்காகவாவது குழந்தைகளைப் படிக்க அனுப்புவார்கள் என்று சிந்தித்த பெருந்தலைவர் மதிய உணவுத் திட்டத்தை தொடங்கினார்.

நான் முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன், சென்னையில் ஒரு பள்ளியில் நடந்த நிகழ்ச்சிக்குக் காலையில் சென்றிருந்தேன். ஒரு குழந்தையைப் பார்த்து, “என்னம்மா சாப்பிட்டீர்களா என்று கேட்டேன். அந்தக் குழந்தை எதார்த்தமாக, வீட்டில் அப்பா – அம்மா வேலைக்குச் செல்கிறார்கள் காலையில் டிபன் செய்ய மாட்டார்கள். அதனால் சாப்பிடவில்லை என்று கூறியது முதல், எனக்கு மனதே சரியில்லை! அதிகாரிகளை அழைத்தேன். பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை உணவு திட்டம் கொண்டு வர வேண்டும், திட்டத்தைத் தயார் செய்யுங்கள் – என்று கூறினேன்.

### 16 லட்சம் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம்!

அதிகாரிகள் என்னிடம் மிகவும் பணிவாக, சார், நம்முடைய நிதிநிலை மோசமாக இருக்கிறது. அது மட்டுமல்ல, இது நம்முடைய தேர்தல் அறிக்கையில்கூட கூறவில்லை என்று கூறினார்கள் உடனே பதில் கூறினேன். வாக்குறுதி கொடுக்கவில்லை என்றால் என்ன? நம்முடைய எதிர்கால தலைமுறையான குழந்தைகளைக் காலையில் நன்றாகச் சாப்பிட்டு, நல்ல உடல் நலத்துடன் இருந்தால்தான் அவர்கள் படிப்பது மனதில் பதியும், இதை நாம் கண்டிப்பாக செய்ய வேண்டும். நிதிநிலை சரி செய்யவும் திட்டம் போடுவோம். நீங்கள் கோப்பினைத் தயார் செய்யுங்கள் என்று உத்தரவிட்டேன்.

வரலாறும் மக்களான நீங்களும் இந்த ஸ்டாலினுக்குக் கொடுத்த வாய்ப்பால், இன்றைக்கு, தமிழ்நாடு முழுவதும் 16 இலட்சம் குழந்தைகள் வயிறார உண்ணும் காலை உணவுத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுகிறது.

### பொற்கால ஆட்சியை நடத்தி வருகிறோம்!

அதுமட்டுமா, இன்றைக்கு ‘தினத்தந்தி நாளேடு’ தலையங்கம் தீட்டி இருக்கிறது! “முதலமைச்சர் பெருமை கொள்ளும் பெண்கள் நலத்திட்டங்கள் என்று அதில் முத்தான மூன்று திட்டங்கள் என்று அவர்கள் பட்டியலிட்டது என்னென்ன திட்டங்கள் தெரியுமா?

முதலில், தாய்வீட்டுச் சீர்போல் எங்கள் அண்ணன் ஸ்டாலின் மாதா மாதம் 1000 ரூபாய் கொடுக்கிறார் என்று தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 15 இலட்சம் சகோதரிகள் உரிமையுடன் கூறும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

இரண்டாவதாக, ’ஸ்டாலின் சார் பஸ்ல இலவசமாகப் போறோம்’ என்று இதுவரை 445 கோடி முறை மகளிர் பயணம் மேற்கொள்ளும் விடியல் பயணம் திட்டம்!

மூன்றாவதாக, அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிக்கு வந்த எனக்கு, அப்பா மாதிரி ஸ்டாலின் அய்யா ஆயிரம் ரூபாய் தருகிறார் என்று கூறும் புதுமைப் பெண் திட்டம்!

இந்த மூன்று மட்டுமல்ல; சமீபத்தில் தொடங்கிய, நான்காவது திட்டம் ஒன்றும் இருக்கிறது! அப்பா – அம்மா, குடும்பத்தைப் பிரிந்து, படிப்பிற்காகவும், வேலைக்காகவும் வெளியூரில் தங்கியிருக்கும் என்னுடைய மகள்களுக்காக நான் ஏற்படுத்தியிருக்கும் ‘தோழி விடுதி’ திட்டம்!

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## “மோடியின் வாக்குறுதிகளுக்கு” கேரண்டியும் இல்லை! வாரண்டியும் இல்லை!

**பிரதமர் மோடியை நீங்கள் நம்புகிறீர்களா? மக்கள் யாருமே அவரை நம்பவில்லை! உடனே மக்களை நம்ப வைக்க இப்போது புதிய விளம்பரம் ஒன்று செய்கிறார்! என்ன தெரியுமா? தாய்மார்கள் இங்கு நிறைய பேர் வந்திருக்கிறீர்கள், ஒரு மிக்சி விளம்பரம் வருமே நினைவு இருக்கிறதா? “ப்ரீத்திக்கு நான் கேரண்டி” என்று ஒரு விளம்பரம்! அந்த மாதிரி இவர், “இது மோடியின் கேரண்டி” என்ற புதிய விளம்பரத்துடன் வந்திருக்கிறார். உண்மையில் அவரின் வாக்குறுதிகளுக்கு, கேரண்டியும் இல்லை! வாரண்டியும் இல்லை! பிரதமராக நாட்டு மக்களுக்கு நல்லது செய்யச் சொன்னால், பத்தாண்டுகளாகச் சொன்ன எதையுமே செய்யாமல், சேல்ஸ்மேன் மாதிரி கேரண்டி என்று விளம்பரம் செய்ய உங்களுக்கு வெட்கமாக இல்லை?**

## பா.ஜ.க.வை ஆட்டம் காண வைக்கும் தேர்தல் பத்திர இமாலய ஊழல்!

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 29-03-2024

# மோடி சொன்னதை வழிமொழிகிறோம் !

“தமிழ்நாட்டுக்கான பேரிடர் நிவாரண நிதியைத் தர மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க உள்ளோம்” என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த நிலைமைக்குத்தான் தமிழ்நாட்டை வைத்துள்ளார் பிரதமர்.

**ஒரு காலத்தில் மாநில உரிமைகளுக்காக முழங்கியவர்தான் இன்றைய பிரதமர். ஆனால் இன்று அவரே பிரதமர் ஆனதும், மாநில முதலமைச்சர்களை மிக மோசமாக நடத்தி வருகிறார். குஜராத் முதலமைச்சராக மோடி இருந்தபோது அவர் என்ன முழங்கினாரோ, அதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் இன்று வழிமொழிந்து கொண்டு இருக்கிறார்.**

“டெல்லியில் இருந்து இந்தியா முழுமைக்குமான திட்டமிடல் என்பது அகற்றப்பட்டு - அந்தந்தப் பகுதிக்கு அதுபற்றிய புரிந்துணர்வுள்ளவர் துணையோடு திட்டமிடுவதுதான் என் அணுகுமுறை” - ( 2014 ஏப்ரல் 23 - தினமணி பேட்டி) என்று சொன்னவர்தான் மோடி. அத்தகைய திட்டமிடல் இருந்ததா இந்தப் பத்தாண்டு காலத்தில்? வந்ததும் செய்த முதல் வேலையே திட்டக் கமிஷனைக் கலைத்ததுதான். மாநில முதலமைச்சர்கள் கோரிக்கை வைப்பதற்கான ஒரு இடத்தைக் காலி செய்ததுதான் மோடி செய்த முதல் வேலை.

**“கூட்டாட்சித் தத்துவத்தை ஆதரிப்பவன் நான். மாநில உரிமைகளை மதிப்பதும், மாநிலங்களை ஒருங்கிணைத்துத் திட்டங்களைத் தீட்டுவதும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் மாநில அரசுகள் டெல்லிக்கு காவடி தூக்கும் நிலைமையை மாற்றி அதிகாரப் பகிர்வுக்கு வழிகோலுவதும்தான் எனது அணுகுமுறையாக இருக்கும். மாநில முதலமைச்சராக நான் அடைந்திருக்கும் 12 ஆண்டு கால அனுபவத்துடன் தேசியத் தலைமையை ஏற்பதால், மாநிலங்களின் பிரச்சினையும் எனக்குத் தெரியும். மத்திய அரசின் முக்கியத்துவமும் எனக்குப் புரியும்” என்று சொன்னவர்தான் மோடி. இதில் எந்தவொரு சொல்லை யாவது அவர் கடைப்பிடித்துள்ளாரா? கடைப்பிடித்ததாகக் காட்ட முடியுமா?**

“மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு மாற்றுக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் உள்ள மாநில அரசுகளைப் பழிவாங்க மாட்டேன். எந்த வகையிலும் மாநில அரசுகள் பழிவாங்கப்படாது என உறுதி அளிக்கிறேன். என்னதான் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும் மத்திய - மாநில உறவு சீர்குலைய இடம் தர மாட்டேன்” என்று பிரதமர் ஆவதற்கு முன் 2014 ஏப்ரல் 19 அன்று பேட்டி அளித்தவர் மோடி. இந்த பத்தாண்டு காலத்தில் அவர் செய்தது எல்லாமே பழிவாங்கல்கள்தான். மத்திய - மாநில உறவுகள் என்பதே அவரது ஆட்சிக் காலத்தில் இல்லை. மத்திய - மாநில கசப்புகள் தான்.

**“குஜராத் மக்கள் ரூ.60 ஆயிரம் கோடியை டெல்லிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திரும்ப வருவது மிகக் குறைவு. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?” என்று 6.12.2012 அன்று குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது கேட்டவர்தான் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள். இதே கேள்வியைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். ‘ஏன் தரமறுக்கிறீர்கள்? உங்க அப்பன் வீட்டுப் பணமா?’ என்று புரியும் மொழியில் புத்திக்கு உறைக்கும் மொழியில் அமைச்சர் உதயநிதியும் இதே கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டு வருகிறார்.**

“உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைக் குஜராத் மாநில பெண் ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் அளிக்காமல் வைத்திருக்கிறார். பெண்களுக்கு எதிரியாகப் பெண் ஆளுநரே இருக்கிறார். ஒரு பெண்மணி குஜராத்தின் ஆளுநராக இருந்தும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற முடியாமல் போனது நமது துரதிருஷ்டமே” - என்று 2013 ஏப்ரல் 8-ம் தேதி, டெல்லியில் நடந்த இந்தியத் தொழிலக சம்மேளனத்தின் (FICCI) கூட்டத்தில் பேசினார் அப்போதைய குஜராத் முதல்வர் மோடி. அதைத் தான் இன்று தமிழ்நாடு - கேரளா - கர்நாடக - மேற்கு வங்க - பஞ்சாப் - டெல்லி முதலமைச்சர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

**“ஒரு மாநிலத்தின் ஆளுநர் பொறுப்பு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். மாநிலத்துடன் உறவைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு ஆளுநருடையது. மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சட்டமன்றம் ஒரு சட்டத்தை இயற்றும். ஆனால் ஆளுநர் அந்தச் சட்டத்தில் கையெழுத்துப் போட மாட்டார். இப்படிச் செய்தால் மாநில அரசுகள் எப்படி மக்களுக்கு நன்மை செய்ய முடியும்? ஆளுநர் மாளிகைகள் எல்லாம் காங்கிரஸ் கட்சியின் அலுவலகங்களாக மாறிவிட்டன” - என்று குஜராத் முதலமைச்சராக இருந்த போது சொன்னவர் நரேந்திர மோடி. அதே செயலைத்தான் இப்போது பிரதமராக இருக்கும் நரேந்திரமோடி செய்து கொண்டு இருக்கிறார்.**

**இவ்வளவு பெரிய இயற்கை பேரிடரை எதிர்கொண்ட தமிழ்நாடு, அதற்கான நிதியை உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்டுத்தான் பெற வேண்டிய நிலைமை இருக்குமானால் - மாநில முதலமைச்சர்கள் டெல்லிக்கு வந்து போராட்டம் நடத்தித்தான் நிதிகளைப் பெற வேண்டிய நிலைமை இருக்குமானால் - இதை விட எதேச்சதிகாரம் வேறு இருக்க முடியுமா?**

நாம் இப்போது காண்பது, ‘ஒற்றை நபர்’ ஆட்சி. ஒவ்வொருவரும் தங்களது ஒற்றை வாக்கைச் செலுத்தி வீழ்த்த வேண்டிய ஆட்சி.

## பிஜி தீவில் கடுமையான நிலநடுக்கம்!

சுவா, மார்ச் 29-

பிஜி தீவின் தலைநகர் சுவா பகுதியில் நேற்று முன்தினம் காலை 6.58 மணியளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவாகி உள்ளது. இதனை தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்து உள்ளது. எனினும், இதனால் ஏற்பட்ட பொருளிழப்புகள் உள்ளிட்ட விவரங்கள் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு தியாகராஜ பாகவதர் பேரவை பொதுச் செயலாளர் கவிஞர் ரவிபாரதி சந்தித்து தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் பேரவையினர் உள்ளனர்.

# தருவைக்குளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்!

## தூத்துக்குடி பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி உறுதி!

**தூத்துக்குடி, மார்ச் 29 - ‘இந்தியா’ கூட்டணியில் தூத்துக்குடி மக்களவை தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (27.03.2024) மாலை தருவைக்குளத்தில் தனது பிரச்சாரத்தை தொடங்கினார். தருவைக்குளத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும் என தி.மு.க. வேட்பாளர் கனிமொழி கருணாநிதி உறுதி அளித்தார்.**



தொடர்ந்து, புதியம்புத்தூர், ஓட்டப்பிடாரம், ஓசானூத்து, வாஞ்சி மணியாச்சி, அக்கநாயக்கன்பட்டி, மருதன்வாழ்வு, ஆயிரவன்பட்டி ஆகிய பகுதிகளில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு அளிக்க பிரச்சாரம் செய்தார்.

பிரச்சாரத்தின்போது கனிமொழி கருணாநிதி பேசியதாவது :-

கடந்த தேர்தலில் வேட்பாளராக நான் களம் கண்ட போது, எதிர்க்கட்சிகள் இவர் சென்னையில் இருந்து வருகிறார். வெற்றி பெற்றால் மீண்டும் தூத்துக்குடி வரமாட்டார் எனக் கூறினர். வெற்றி பெற்ற பின்னர் இங்கு பலமுறை வந்துள்ளேன். தருவைகுளத்தில் இருந்து வேளாங்கண்ணி செல்ல பேருந்து வசதி, கனரா வங்கி கிளை வேண்டும் என மக்கள் கேட்டனர். இவை செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ரூ.10 லட்சத்தில் உயர் கோபுர விளக்கு அமைக்கும் பணிகள் தொடங்கி உள்ளன. இங்கு புதிய மீன்பிடி துறைமுகம் வேண்டுமென மீனவர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும். ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு ரூ.2 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீன்பிடி தடைக்காலத்தில் ரூ.5 ஆயிரத்தில் இருந்து ரூ.8 ஆயிரமாக உயர்த்தி தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். முதலமைச்சர் உயர்த்தி தருவதாகக் கூறியுள்ளார். விரைவில் அந்த நிதி உங்கள் கைகளில் வந்து சேரும். அதனால் தேர்தலில் வெற்றி பெற்று நான் எங்கும் போய்விடவில்லை. உங்களை தேடித் தான் வந்து கொண்டு இருக்கின்றேன்.

**மிகப்பெரிய கார் தொழிற்சாலை!**

இங்கு மிகப்பெரிய வியட்நாம் கார் தொழிற்சாலை இன்னும் 15 மாதங்களில் தொடங்கப்பட உள்ளது. அதற்குரிய பணியாளர்களைத் தேர்வு செய்ய உள்ளனர். இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள், இளம்பெண்களுக்கு அவர்களே பயிற்சி அளித்து பணிக்கு அமர்த்த உள்ளனர். டைடல் பார்க் விரைவில் திறக்கப்பட உள்ளது. இந்த ஆட்சி ஆண், பெண், சாதி, மதம் என எந்த வேறுபாட்டையும் பார்க்காத ஆட்சி. ஆனால், மதத்தை மட்டும் வைத்து அரசியல் செய்து கொண்டுள்ள மோடி, எந்த வாக்குறுதி கொடுத்தாலும் நிறைவேற்ற மாட்டார். மழை வெள்ளத்துக்கு எந்த நிவாரணமும் கொடுக்கவில்லை. ஆனால், நிவாரணம் கொடுத்தது தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தான்.

**சிலிண்டர் விலை குறைப்பு!**

சமையல் எரிவாயு சிலிண்டருக்கு மானியம் கொடுத்து, விலையை குறைப்போம், என்று பா.ஜ.க.வினர் கூறினர். மோடி ஆட்சிக்கு வந்தபோது, ஒரு எரிவாயு சிலிண்டர் விலை ரூ.410. தற்போது ஆயிரம் ரூபாய்க்கு மேல். ஆனால், மகளிர் தினத்துக்குப் பெண்கள் சமையல் அறையிலேயே இருக்கப் பிறந்த மாதிரி ரூ.100 குறைத்துள்ளார். இதுதான் அவருக்குத் தெரிந்த மகளிர் தினம். சிலிண்டர் விலையைக் குறைத்துள்ளேன் எனத் தேர்தலுக்கு முன் மகளிர்களை ஏமாற்றுகிறார்.

இதற்காக தி.மு.க. தேர்தல் அறிக்கையில் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.500 என குறைக்கப்படும். பெட்ரோல் ரூ.75, டீசல் ரூ.65 என குறைக்கப்படும். அதே போல், சுங்கச்சாவடிகள் தமிழ்நாட்டில் முற்றிலும் ஒழிக்கப்படும் என கூறியுள்ளோம். தி.மு.க. சொல்வதை தான் செய்யும்.

இந்தியா கூட்டணி ஆட்சி ஒன்றியத்தில் வர வேண்டும். தமிழ்நாட்டுக்கு நன்மை செய்யக்கூடிய ஆட்சி அங்கே வர வேண்டும். திமுக சார்பில் முதலமைச்சர் என்னை மீண்டும் வேட்பாளராக நிற்கும் வாய்ப்பு அளித்துள்ளார். மீண்டும் உங்களுடன் பணியாற்றும் வாய்ப்பை நீங்கள் எனக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

பிரச்சாரத்தின்போது, தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் கே.பி.ஆறுமுகம் மற்றும் கூட்டணி கட்சியினர் உட்பட திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

# சர்வாதிகார பா.ஜ.க. ஆட்சி நீடிக்கக் கூடாது!

## உதகையில் - வேட்பு மனு தாக்கல் செய்த ஆ.ராசா பேட்டி!

உதகை, மார்ச் 29-

சர்வாதிகார பா.ஜ.க. ஆட்சி நீடிக்கக் கூடாது என்று நீலகிரி நாடாளு மன்ற வேட்பாளர் ஆ.ராசா செய்தியாளர்களிடம் கூறினார்.



நடைபெற உள்ள நாடாளு மன்றத் தேர்தலுக்கான தனது வேட்பு மனுவை தாக்கல் செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய ஆ.ராசா கழகத்தின் தலைவர் அடிக்கடி கூறுவது போல பாசிசம் அடியோடு அகற்றப்பட வேண்டும். இந்த தேசத்தின் அரசியலமைப்பு மீது நம்பிக்கை உள்ளவர்கள். ஊழலும், மதவாதம் அடியோடு அகற்றப்பட்டு இந்தியா துணைக்கண்டத்தின் அடையாளமாக அமைதியும், சீரான வளமும் பெற்றிட உழைக்க, உறுதி ஏற்போம்’ என்றார்.

பேட்டியின் போது நீலகிரி மாவட்டச் செயலாளர் முபாரக், சுற்றுலாத் துறை அமைச்சர் க.இராமச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க.வேட்பாளர் கே.என்.அருண் நேருவிற்கு, பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட எளம்பலூர் கிராமத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் வாக்குகள் சேகரித்தார். அப்போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆளுநர் ரவியைக் கூட எதிர்க்க முடியாத - பா.ஜ.க.வுக்கு அடிமைச் சேவகம் செய்து உரிமைகளைத் தாரை வார்த்த

# பழனிசாமி ‘தமிழ்நாட்டை மீட்பேன்’ என்பது வெட்கக் கேடு!



பிரதமர் இவர் இப்படி, வெறும் கையால் முழம் போடுகிறார் என்றால், மற்றொருவர் இருக்கிறார் பழனிசாமி! காற்றிலேயே கம்பு சுற்றுபவர் அவர்! நடப்பது நாடாளுமன்றத் தேர்தல்! பத்தாண்டுகளாக மக்கள் விரோத கொள்கைகளால், நாட்டை படுகுழியில் தள்ளியது ஒன்றிய பா.ஜ.க. அரசு! மண்புழு மாதிரி ஊர்ந்து பதவிக்கு வந்து, பதவி சுகத்திற்காகப் பச்சோந்தியாக மாறி, பா.ஜ.க.வுக்குப் பார்ட்னராக இருந்து, தமிழ்நாட்டு உரிமைகளை அடகு வைத்த பழனிசாமி, கூட்டணியிலிருந்து வெளியே வந்துவிட்டோம் என்று கபட நடகம் நடத்துகிறாரே எங்கேயாவது, பா.ஜ.க.வையோ, மோடியையோ விமர்சித்து ஒரு வார்த்தை பேசுகிறாரா? பிரதமர் பற்றி மட்டுமல்ல; ஆளுநரைப் பற்றிகூட பேசுவதில்லை! இதை நாங்கள் கேட்ட உடனே இப்போது சொல்கிறார்!

“ஆளுநரால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. பிறகு ஏன் நாங்கள் அவரைப் பற்றி பேச வேண்டும்? என்று அறிவுக்கொழுந்து மாதிரி கேள்வி கேட்டிருக் கிறார். ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் பேசும் பேச்சா இது? ஆளுநரால் இந்தத் தனிப்பட்ட ஸ்டாலினுக்கோ – தி.மு.க.விற்கோ எந்தப் பிரச்சினையும் இல்லை. அவருக்கும் எங்களுக்கும் என்ன வாய்க்கால் வரப்பு தகராறா? இல்லை, பாகப்பிரிவினை, பங்காளி சொத்து பிரச்சினையா? தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதைத் தடுக்கிறார். தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் சட்டங்களுக்கும் சட்டமுன்வடிவுகளுக்கும் அனுமதி அளிக்க மறுக்கிறார். இதுதான் எங்களுக்கும் அவருக்குமான பிரச்சினை!

### ஆளுநரை பார்த்து பயப்படும் பழனிசாமி?

மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்கு அனுமதி தராமல் ஆளுநர் இழுத்தடிப்பது, தமிழ்நாடு சட்டமன்றத்தை இழிவுபடுத்துவது இல்லையா? முதலமைச்சரான எனக்கு எப்படி கோபம் வருகிறதோ, அதே கோபம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் பழனிசாமிக்கு வர வேண்டாமா? ஆளுநர் இப்படி இழுத்தடிப்பது தவறு என்று ஆளுநரைக் கேட்டிருக்க வேண்டாமா? அப்படி கேட்க மறுக்கிறார் என்றால், ஒன்று ஆளுநரைப் பார்த்து பயப்படுகிறார் என்று அர்த்தம்! இல்லை, பழனிசாமிக்குச் சொரணை இல்லை என்று அர்த்தம்! நாங்கள் கேட்பது, பழனிசாமி அவர்களே! ஆளுநருக்கும் உங்களுக்கும் பிரச்சினை இருந்தால் மட்டும் வீரமாக அவரை எதிர்த்துப் பேசிவிடுவீர்களா? அ.தி.மு.க. ஆட்சியில் ஆளுநராக இருந்தாரே பன்வாரிலால் புரோகித், அவர் ஏதோ மக்கள் பிரதிநிதி போல ஆய்வு செய்யச் சென்றார். அப்போதுகூட அவருக்குப் பயந்து அமைதியாகக் கண்டுகொள்ளாமல் இருந்தவர்தான் நீங்கள். அப்போதுகூட, நாங்கள்தான் பன்வாரிலால் புரோகித்துக்கு எதிராகக் கருப்புக் கொடி காட்டினோம். ஆட்சியில் இருப்பது மண்புழுவாக ஊர்ந்த பழனிசாமிதானே, நமக்கு என்ன? அப்படியென்று நாங்கள் இல்லை.

### பாதம் தாங்கி பழனிச்சாமி!

ஆளுநரின் நடவடிக்கை என்பது, மக்களாட்சி தத்துவத்திற்கு விரோதமாக இருந்தால், எப்போதும் எந்தச் சூழலிலும் எதிர்க்கிறவர்கள் நாங்கள். ஆளும்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஒரே கொள்கைதான்! அப்படிதான் தலைவர் கலைஞர் எங்களை வழிநடத்தி இருக்கிறார். தமிழ்நாட்டு ஆளுநராக இருந்தாலும் கேரள ஆளுநராக இருந்தாலும் மக்கள் பிரதிநிதிகளை மதிக்கவில்லை என்றால் கண்டிப்போம். பாதம்தாங்கி பழனிசாமி அவர்களே உங்களை மாதிரியே எல்லாரும் சொரணை இல்லாமல் இருக்கவேண்டும் என்று நினைக்காதீர்கள்.

அடிப்படை அறிவியல் ஒன்றைச் சொல்கிறேன் தெரிந்து கொள்ளுங்கள் மனிதன் நிமிர்ந்து நடக்கக் காரணமே முதுகெலும்புதான்! பொழுது விடிந்ததுமே தமிழ்நாட்டிற்கு எதிராக தமிழர்களுக்கு எதிராக தமிழ்ப் பண்பாட்டிற்கு எதிராக என்ன கருத்து சொல்லலாம் என்று எழுந்திருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியைக்கூட எதிர்க்க முதுகெலும்பு இல்லாத பழனிசாமி அவர்களே தமிழ்நாட்டை மீட்கப் புறப்படுகிறேன் என்று சொல்வதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

### பழனிசாமி வசம் அ.தி.மு.க. வந்த பிறகு தொடர் தோல்விகள்!

அம்மையார் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு நடந்த ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் 2019 நாடாளுமன்றத் தேர்தல் 2019இல் நடந்த 21 சட்டமன்றத் தொகுதிகளின் இடைத்தேர்தல் – 2019இல் நடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தல் 2021 சட்டமன்றத் தேர்தல் 2021இல் நடந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல் 2022இல் நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் என்று 8 தேர்தல்களிலும் அ.தி.மு.க. தோல்வி அடைந்தது. எடப்பாடி பழனிசாமி வசம் அ.தி.மு.க. வந்த பிறகு தொடர்ச்சியாகத் தேர்தல் தோல்விகளைச் சந்தித்து வருகிறது அ.தி.மு.க.

இதற்கெல்லாம் காரணம் பா.ஜ.க.வுக்கு அடிமை சேவகம் செய்து, தமிழ்நாட்டு உரிமைகளை மொத்தமாக தாரைவார்த்து துரோகம் செய்ததுதான்! இப்படி துரோகங்கள் பல செய்தவர்தான் தமிழ்நாட்டை மீட்கப் போகிறாராம்? பழனிசாமி அவர்களே முதலில், பா.ஜ.க.விடம் இருந்து அ.தி.மு.க.வை மீட்கப் பாருங்கள். பா.ஜ.க. தனியாக வந்தாலும் சரி பழனிசாமி நாடகக் கம்பெனி மூலமாக வந்தாலும் சரி – அவர்களை வீழ்த்தியாக வேண்டிய கடமை தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க. இரண்டையும் ஒரு சேர வீழ்த்துங்கள்.

தென்காசி நாடாளுமன்றத் தொகுதிக்கு திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும் விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதிக்கு காங்கிரஸ் கட்சி வெற்றி வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அவர்களுக்குக் கை சின்னத்திலும் வாக்களிக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் அளிக்கும் வாக்குதான் இந்தியாவைக் காப்பாற்றும்! தமிழ்நாட்டைக் காப்பாற்றும்! எதிர்காலத் தலைமுறையைக் காப்பாற்றும்! பாசிசத்தை வீழ்த்த – இந்தியாவைக் காக்க – உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன் நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்,**
**கிருஷ்ணன் கோயில் பொதுக்கூட்டம்**
**27.3.2024**

## சாதனைகளாக மாறப் போகும் வாக்குறுதிகள்!

**நம்முடைய இந்தியா கூட்டணி, ஒன்றிய அரசாக வந்ததும் தமிழ்நாட்டிற்குச் செய்ய இருக்கும் நன்மைகளை, திட்டங்களாக வாக்குறுதிகளாகத் தேர்தல் அறிக்கையில் வழங்கியிருக்கிறோம்... சாதனைகளாக மாறப்போகும் அந்த வாக்குறுதிகளில் சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்திகளாகச் சொல்ல விரும்புகிறேன்...**

- **பத்தாண்டுகளாக சாமானிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று சிறிதும் நினைத்துப் பார்க்காமல், மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் தொடர்ந்து உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!**
- **சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும்!**
- **தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.**
- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100இல் இருந்து, 150 நாட்களாவும், ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.**
- **மாணவர்களின் கல்விக் கடன் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும்.**
- **விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளிலும், வங்கிகளிலும் வாங்கியிருக்கும் கடனும் - வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.**
- **வங்கிகளில் மினிமம் பேலன்ஸ் இல்லாதபோது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்.**
- **ராபர்ட் கால்டுவெல் மொழி ஆராய்ச்சி மையம் உருவாக்கப்படும்.**
- **திருநெல்வேலி, சங்கரன்கோவில் இரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் ஆலங்குளம், சுரண்டை, சேர்ந்தமரம் வழியாக சங்கரன்கோவிலை இணைக்கும் புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.**
- **கேரளா, கோவை மற்றும் சென்னை செல்லும் இரயில்கள் கடையம் இரயில் நிலையத்தில் நின்று செல்ல வழிவகை செய்யப்படும்.**
- **காரியாப்பட்டி இரயில் நிலையம் அமைக்கப்படும்.**
- **எல்லாவற்றிற்கும் மேல், இந்தப் பகுதியில் இருக்கும் சிவகாசி பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்கச் சீனப் பட்டாசு இறக்குமதி தடை செய்யப்படும்.**

---

நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்


## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய பிரச்சாரம்!




2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் இன்றைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
| --- | --- |
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | தருமபுரி, கிருஷ்ணகிரி. |







கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.3.2024) விருதுநகர் மாவட்டம், கிருஷ்ணன்கோயிலில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் விருதுநகர் வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அவர்களையும், தென்காசி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் அவர்களையும் அறிமுகப்படுத்தி இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, மாவட்ட கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, ஜெயபாலன், மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கபாண்டியன், பழனி நாடார், அசோகன், ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார் உள்ளிட்ட முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள் மற்றும் ‘இந்தியா’ கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# பட்டாசுத் தொழிலைச் சீரழித்த மோடி!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை - முதல் பக்கத் தொடர்ச்சி

இவையெல்லாம் பெண்களுக்காக மட்டுமே நம்முடைய அரசு செய்யும் திட்டங்கள்! இன்னும் சிறப்புத் திட்டங்கள் இருக்கிறது. ”இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், நான் முதல்வன், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், முதல்வரின் முகவரி, கள ஆய்வில் முதலமைச்சர், நீங்கள் நலமா” என்று ஏராளமான முன்னோடித் திட்டங்களை உருவாக்கி, அதன் மூலமாகக் கோடிக்கணக்கான மக்கள் பயன்பெறும் வகையில் பொற்கால ஆட்சியை நாம் நடத்திக் கொண்டு வருகிறோம்.

இப்படிப்பட்ட சாதனைத் திட்டங்களை தரும் முதலமைச்சராக – உங்கள் குடும்பங்களில் ஒருவனாக, உரிமையுடன் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்.

## இடஒதுக்கீடு - சமூக நீதிக்கு ஆபத்து!

**சீர்மரபினருக்கு ஒற்றைச் சான்றிதழ்!**

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு இந்தப் பகுதிக்கு வந்தபோது, சீர்மரபின மக்கள் என்னிடம் ஒரு முக்கிய கோரிக்கையை வைத்தார்கள். சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு DNC மற்றும் DNT என்று இரண்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வந்தது. இது பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்துகிறது என்று என்னிடம் கூறினார்கள். ‘இந்தக் குழப்பத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம்’ என்று நான் வாக்குறுதி கொடுத்தேன். அந்த இரட்டைச் சான்றிதழ் குழப்பத்திற்குக் கூறியபடியே முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன். இனி ஒற்றைச் சான்றிதழ் பெற்றால்போதும் என்று உத்தரவிட்டு அரசாணையும் வெளியிடப்பட்டது!

சொன்னதைச் செய்துவிட்டுத்தான் உங்கள் முன்னால் வந்து தெம்போடு துணிவோடு நிற்கிறேன். ஒன்றிய மாநில அரசுகளின் அனைத்துச் சலுகைகளையும் பெறுவதற்கு, இந்த ஒற்றைச் சான்றிதழ் வழிவகுக்கும்.

அதுமட்டுமல்ல, பிறபடுத்தப்பட்டோர் சமுதாய மக்களின் நலனுக்காக – மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக ஆதிதிராவிட சமுதாய மக்கள் நலனுக்காக – சமூக – கல்வி முன்னேற்றத்துக்காகப் பல்வேறு திட்டங்களை செய்து கொடுத்தது மட்டுமல்ல, செய்யும் அரசும் நாங்கள்தான்! செய்ய இருக்கும் அரசும் நம்முடைய திராவிட மாடல் அரசுதான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கையே சமூகநீதிதான். திராவிட இயக்கம் உருவானதே அனைத்துச் சமூகங்களுக்கும் அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டும் என்றுதான். இன்றைக்குத் தமிழ்நாட்டில் அனைத்து மக்களும் கல்வி, வேலைவாய்ப்புகளைப் பெற்று, முன்னேறி இருக்கிறார்கள் என்றால், 100 ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி ஆட்சியில் உருவாக்கப்பட்ட வகுப்புவாரி உரிமைச் சட்டம்தான் காரணம்! இதை அடுத்தடுத்து வந்த கட்சிகளும் அமல்படுத்தினார்கள்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் ஆட்சி, சமூகநீதியை நிலைநாட்டும் ஆட்சியாக இருந்தது. சமூகநீதிக்கு ஆபத்து வந்தபோது, தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் போராட்டம் நடத்தினார்கள். இதை, அன்றைய பிரதமர் நேரு அவர்களுக்கு எடுத்துக் கூறி, முதல் அரசியல் சட்டத் திருத்தம் உருவாகக் காரணமாக இருந்தவர் பெருந்தலைவர் காமராசர். சட்டமாக உருவாக்கிக் கொடுத்தவர் புரட்சியாளர் அம்பேத்கர். இப்படி பெருந்தலைவர்களால் உருவாக்கப்பட்ட இடஒதுக்கீடு சமூகநீதிக்கு மிகப்பெரிய ஆபத்தை உருவாக்கும் கட்சிதான் பா.ஜ.க.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து என்ன செய்கிறார்கள்? ஒன்றிய அரசு பணிகளில் மண்டல் பரிந்துரை அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவது இல்லை! ஒன்றிய அரசின் உயர் கல்வி நிறுவனங்களிலும் வழங்குவது இல்லை!

நாம் கூறும் இதை, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் பேசும்போது புள்ளிவிவரத்துடன் கூறினார்! ஒன்றிய அரசின் மிக உயர் பொறுப்பில் இருக்கும், அதாவது நம் நாட்டையே நிர்வகிக்கும் 90 செயலாளர்களில் வெறும் 3 பேர்தான், பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள்! பட்டியல் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் குறைவுதான்.

இது நாட்டிலேயே பெரும்பான்மையாக இருக்கும் பிற்படுத்தப்பட்ட பட்டியலின சமூக மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி இல்லையா? ஒடுக்கப்பட்ட மக்கள் படிப்பதை – பெரிய பொறுப்புகளுக்குச் செல்வதை காலம் காலமாகத் தடுத்த இவர்கள் – இப்போதும் தங்கள் கையில் ஆட்சியை வைத்திருப்பதால் தடுக்கிறார்கள். அதுக்கு என்னென்ன புதிய சட்டங்கள் வருகிறது?

**குலக்கல்வியை ஊக்குவிக்கும் புதிய கல்விக் கொள்கை!**

**ஏழை – நடுத்தர மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைக்கும் நீட் தேர்வு!**

**ஒன்றிய பணிக்கான தேர்வுகளில் தமிழைப் புறக்கணித்து, இந்தித் திணிப்பு சமஸ்கிருதத் திணிப்பு செய்து, நம்முடைய பிள்ளைகளின் வேலைகளைப் பறிக்கிறார்கள்!**

**பொருளாதார அடிப்படையில், இடஒதுக்கீடு என்று ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் மேலும் ஒடுக்கப் பார்க்கிறார்கள்.**

**சாதிவாரி கணக்கெடுக்க ஒன்றிய அரசு மறுப்பு!**

இப்படி அநியாயமாக நம்முடைய உரிமைகளை பறிக்கும் கூட்டம்தான் பா.ஜ.க.! அதனால்தான் கூறுகிறோம். பட்டியலினத்தவர் – பழங்குடியினர் – பிற்படுத்தப்பட்டோர் – மிகவும் பிற்படுத்தப்பட்டோர் முன்னேறுவதை பா.ஜ.க. எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளாது. இதனால்தான் ஒன்றிய அளவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன், சாதிவாரிக் கணக்கெடுப்பும் நடத்த வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து கேட்கிறோம், போராடுகிறோம். அதையாவது செய்கிறார்களா? அதையும் மறுக்கிறார்கள்! இதனால்தான் கூறுகிறோம், நாட்டின் சிறுபான்மையினருக்கும் மட்டுமல்ல, பெரும்பான்மை மக்களுக்கும் எதிரி பா.ஜ.க.தான் என்று மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறேன்!

இதுமட்டுமா, வரலாறு காணாத ஊழல்களைச் செய்துவிட்டு, அதை மூடி மறைக்க E.D. – I.T. – C.B.I. போன்ற அமைப்புகளைக் கூட்டணியாகச் சேர்த்துக் கொண்டார்கள். இப்போது பா.ஜ.க.வை ஆட்டம் காண வைக்கும் ’இமாலய ஊழலான’ தேர்தல் பத்திர ஊழல் வெளியாகி இருக்கிறது.

**இன்றைக்குக் காலையில் செய்திகள் வந்ததே! ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் திரு. பரகலா பிரபாகர் அவர்கள் ஒரு பேட்டி அளித்திருக்கிறார். அதில், இந்தத் தேர்தல் பத்திர ஊழல் என்பது, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே மிகப்பெரிய ஊழல் என்று கூறியுள்ளார். ஏற்கனவே அவர், பா.ஜ.க. ஆட்சி நம்முடைய நாட்டை எப்படியெல்லாம் சீரழித்திருக்கிறார் என்று புதிய இந்தியா எனும் கோணல் மரம் என்ற புத்தகத்தில் கவலையுடன் எழுதியிருக்கிறார். புதிய இந்தியா பிறந்துவிட்டது என்று பா.ஜ.க. கட்டமைக்கும் பிம்பம் எப்படி மோசமானது என்று நாளுக்கு நாள் அம்பலமாகிக் கொண்டிருக்கிறது.**

**நாட்டின் தன்னாட்சி அமைப்புகளைக்கூட, பா.ஜ.க.வின் ஆதரவு கட்சிகள்போல் செயல்பட வைத்து, அரசியல் சட்டப்படிதான் ஆட்சி நடக்கின்றதா என்ற சந்தேகத்தை பா.ஜ.க. ஆட்சி உருவாக்கிவிட்டார்கள்.**

இது பற்றி, நேற்று ஆங்கில ‘இந்து’ நாளேடு ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது அதில், E.D. – I.T. ரெய்டுகள் நடந்த நிறுவனங்கள் வாங்கிய, பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேர்தல் பத்திரங்களை, ஆளும் பா.ஜ.க. பணமாக்கியிருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். பா.ஜ.க. ஆட்சியால் இந்திய நாட்டு மக்களுக்கு நடந்த நன்மை என்று ஒன்றாவது இருக்கிறதா?

சமூகநீதியை – சகோதரத்துவத்தை – சமதர்மத்தை நிலைநாட்டவேண்டும் என்றால் இந்தியா கூட்டணி ஆட்சி இந்தியாவில் உருவாகியே ஆக வேண்டும்.

**பட்டாசுக்கு வரி போட்ட பா.ஜ.க. அரசு!**

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்திற்கும், தமிழுக்கும் துரோகம் செய்வதை வழக்கமாக வைத்திருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி. ஆனால், வாக்கு கேட்டு மட்டும் தமிழ்நாட்டுக்கு வருகிறார். பிரதமர் ஆவதற்கு முன்னால் தமிழ்நாட்டிற்கு வாக்கு கேட்டு வந்தபோது பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்தாரே? அதில் எதையாவது செய்தாரா? இல்லையே!

2014ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதி இராமநாதபுரத்தில் பேசிய மோடி, ”சீனாவில் இருந்து பட்டாசுகள் வருவதால் குட்டி ஜப்பானான சிவகாசி பட்டாசுத் தொழில் நலிவடைந்திருக்கிறது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், பட்டாசுத் தொழிற்சாலைகளையும், தொழிலாளர்களையும் பாதுகாப்போம் என்று பேசினாரே! இதற்காக அவர் செயல்படுத்திக் கொடுத்த திட்டங்கள் என்ன? சட்டவிரோதமாகச் சீனப்பட்டாசுகள் இன்னும் இறக்குமதி செய்யப்படுகிறது! சீனப்பட்டாசுகள் பல்வேறு மாநிலங்களில் குறைந்த விலையில் கிடைத்தது. டெல்லியிலும் மும்பையிலும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சீனப்பட்டாசுகள் கைப்பற்றப்பட்டது. சீனப் பட்டாசுகளை பா.ஜ.க. அரசால் முழுமையாக தடுக்க முடியவில்லை. இதனால், சிவகாசியில் 1000 கோடி ரூபாய் அளவுக்குப் பட்டாசு தயாரிப்பு சரிவைச் சந்தித்தது. இப்படி தொழில் நலிவடைந்து இருந்தபோது, ஒன்றிய அரசு கொண்டு வந்த ஜி.எஸ்.டி வரி விதிப்பில் ஆடம்பரப் பொருள்கள் பட்டியலில் பட்டாசையும் சேர்த்து 28 விழுக்காடு வரி போட்ட கட்சிதான் பா.ஜ.க.!

## தமிழர்களின் உரிமைகளை பறிக்கிறது பா.ஜ.க.!

12 விழுக்காடாகக் குறைக்க வேண்டும் என்று பட்டாசு உற்பத்தியாளர்களே தொடர் போராட்டம் நடத்தினார்கள். பட்டாசு வெடிபொருள் தயாரிப்பு தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்தபோது ஒன்றிய அரசு முறையாக வாதங்களை வைக்கவில்லை. பசுமைப் பட்டாசுகளைத் தயார் செய்யுங்கள் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், பசுமைப் பட்டாசு என்றால் என்ன என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு வரையறை செய்யவே இல்லை.

பசுமைப் பட்டாசு தயாரிப்பதற்கு ஆலைகள் காத்திருக்கிறது. ஆனால், பா.ஜ.க. அரசு எந்த உதவியும் செய்யவில்லை. கொரோனாவிற்குப் பிறகு பட்டாசுத் தொழில் சரிந்தது. அதை மீட்டெடுக்க எந்த முயற்சியையும் பா.ஜ.க. அரசு செய்யவில்லை. இப்படி பத்தாண்டுகளாகப் பட்டாசுத் தொழிலை நாசம் செய்த அரசுதான் பா.ஜ.க. அரசு.

இப்படி மக்களை பாதிக்கும் எல்லாவற்றிலும் அலட்சியமாகவும் ஆணவமாகவும் இருக்கும் கட்சிதான் பா.ஜ.க.

**‘இந்தியா’ கூட்டணியைப் பார்த்து பயப்படும் மோடி!**

பத்தாண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்த பா.ஜ.க. அரசானது, நாட்டையே படுகுழியில் தள்ளிவிட்டது. நாட்டை உடனடியாக மீட்டாக வேண்டும்! அப்படி மீட்பதற்கான மிகப்பெரிய வாய்ப்புதான் இந்தத் தேர்தல்! அதனால்தான் இந்தியா முழுமைக்குமான ஜனநாயக சக்திகள் இந்தியா கூட்டணியை அமைத்திருக்கிறோம்! ‘இந்தியா’ கூட்டணியை பார்த்து பயந்து, பிரதமர் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார்.

தேர்தல் வந்துவிட்டால், கூடவே மக்கள் மேல் அவருக்கு கரிசனமும் பொங்கி வரும். திடீரென்று விலையெல்லாம் குறைப்பார். இப்போதுகூட சிலிண்டர் விலையை பெட்ரோல் விலையை டீசல் விலையைக் குறைத்திருக்கிறார்.

விலையை ஏற்றியது யார்? மாண்புமிகு மோடி அவர்கள் பிரதமரான நாள் முதல் விலை ஏறிக்கொண்டே இருந்தது. ஆனால், விலையேற்றத்திற்கும் தனக்கும் சம்பந்தமே இல்லாதது போல் இருப்பார் தேர்தல் நேரம் வந்துவிட்டால் மட்டும் விலையைக் குறைக்கும் பவர் வந்துவிடும்!

**தேர்தலுக்கு தேர்தல் மட்டும் கருணை சுரக்கும்!**

சமீபத்தில், மார்ச் 8ஆம் தேதி மகளிர் தினம் என்று உடனடியாக சிலிண்டர் விலையைக் குறைத்தார். வருடா வருடம்தான் மகளிர் தினம் வருகிறது! அப்போதெல்லாம் இதுபோன்று குறைத்தாரா? இல்லையே! அப்போதெல்லாம் இந்திய நாட்டு மகளிரும் இந்தியக் குடும்பங்களும் படும் கஷ்டம் அவர் கண்ணுக்குத் தெரியவில்லையா? இப்போது தேர்தல் வந்ததும் குறைக்கிறார் என்னவொரு கருணை உள்ளம் அவருக்கு! தேர்தலுக்குத் தேர்தல் மட்டும் கருணை சுரக்கும் வித்தியாசமான உள்ளம்!

மோடி பிரதமராகப் பொறுப்பேற்பதற்கு, 2013க்கு முன்னால், சிலிண்டர் விலை எவ்வளவு? 410 ரூபாய்! பத்து ஆண்டுகள் கழித்து, 2023இல் சிலிண்டர் விலை எவ்வளவு? 1103 ரூபாய்! ஐந்து மாநில தேர்தல் வந்துவந்தது! கூடவே மோடிக்கு இரக்கமும் வந்தது! சிலிண்டர் விலை குறைந்தது! இப்போது நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது, அதனால் 100 ரூபாய் குறைத்திருக்கிறார். தேர்தலுக்கு தேர்தல் மட்டும் விலை குறைப்பு செய்வது ’பச்சோந்தி அரசியல்’ இல்லையா? 410 ரூபாய் இருந்த சிலிண்டரை ஆயிரம் ரூபாய்க்கு மேல் உயர்த்தியதுதான் உங்களின் சாதனை! தேர்தல் வந்ததால் சிலிண்டர் விலையை மட்டுமல்ல, பெட்ரோல் டீசல் விலையையும் குறைக்கிறார். விலைக்குறைப்பு என்பது மக்களை ஏமாற்ற பிரதமர் மோடி நடத்தும் நாடகம்! அவரது நாடகங்களை மக்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள்

இப்படிப்பட்ட பிரதமர் மோடியை நீங்கள் நம்புகிறீர்களா? மக்கள் யாருமே அவரை நம்பவில்லை! உடனே மக்களை நம்ப வைக்க இப்போது புதிய விளம்பரம் ஒன்று செய்கிறார்! என்ன தெரியுமா? தாய்மார்கள் இங்கு நிறைய பேர் வந்திருக்கிறீர்கள், ஒரு மிக்சி விளம்பரம் வருமே நினைவு இருக்கிறதா? ”ப்ரீத்திக்கு நான் கேரண்டி என்று ஒரு விளம்பரம்! அந்த மாதிரி இவர், ”இது மோடியின் கேரண்டி என்ற புதிய விளம்பரத்துடன் வந்திருக்கிறார். உண்மையில அவரின் வாக்குறுதிகளுக்கு, கேரண்டியும் இல்லை! வாரண்டியும் இல்லை! பிரதமராக நாட்டு மக்களுக்கு நல்லது செய்யச் சொன்னால், பத்தாண்டுகளாகச் சொன்ன எதையுமே செய்யாமல், சேல்ஸ்மேன் மாதிரி கேரண்டி என்று விளம்பரம் செய்ய உங்களுக்கு வெட்கமாக இல்லை? கேரண்டிகளின் லட்சணம் என்ன?

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கருப்புப் பணத்தை மீட்டு அனைவரின் வங்கிக் கணக்கிலும் 15 இலட்சம் போடலாம் என்று சொன்னாரே? 15 இலட்சம் இல்லை, 15 ஆயிரமாவது மக்களுக்கு கொடுத்தாரா? 15 ரூபாயாவது கொடுத்தாரா? அதுமாதிரியான கேரண்டியா?

இல்லை, ஆண்டுக்கு இரண்டு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவேன் என்று சொன்னாரே, என்ன ஆனது? உலகத் தொழிலாளர் அமைப்பு நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இன்றைக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் 83 விழுக்காடு இளைஞர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அந்த அறிக்கை கூறுகிறது. இதுதான் மோடி சொல்லும், கேரண்டியின் லட்சணம்! புதிது புதிதாக வாக்குறுதி கொடுத்தால், நிறைவேற்றாத பழைய வாக்குறுதியெல்லாம் மக்கள் மறந்துவிடுவார்கள் என்று பிரதமர் மோடி தப்புக் கணக்கு போடுகிறார்.

பிரதமர் மோடி அவர்களே தேர்தலுக்குத் தேர்தல் நீங்கள் வெறும் வாயால் வடை சுடுவீர்கள் என்று மக்களுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. தமிழ்நாட்டிற்கு ஒன்றுமே செய்யாமல், பத்து ஆண்டில் ஒரு சிறப்புத் திட்டத்தைக்கூட நிறைவேற்றாமல், அறிவித்த எய்ம்ஸ் மருத்துவமனையைக்கூட கட்டத் தொடங்காமல், பேரிடர் நேரத்தில் நிதி தராமல், ஒரு இரங்கல்கூட சொல்லாமல், இப்போது தேர்தல் நேரத்தில் மட்டும் இங்கு அடிக்கடி வாக்கு கேட்டால், உங்களுக்கு ஆதரவு தர நாங்கள் ஏமாளிகளா? நாங்கள் என்ன சோற்றால் அடித்த பிண்டங்களா? என்று மக்கள் கேட்கிறார்கள்! பதில் சொல்லுங்கள் பிரதமர் அவர்களே!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.





## விருதுநகர் - தென்காசி தொகுதிகளைச் சேர்ந்த

# பல்வேறு சங்க நிர்வாகிகள் - முன்னணியினர் ஆதரவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

**விருதுநகர், மார்ச் 29 -**

**நாடாளுமன்றத் தேர்தல் 2024 விருதுநகர், தென்காசி ஆகிய தொகுதிகளில் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை விருதுநகர் மற்றும் தென்காசி தொகுதிகளைச் சேர்ந்த முக்கிய மானவர்கள் நேரில் சந்தித்து ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.**

இது பற்றிய விபரம் வருமாறு:

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் விருதுநகர், தென்காசி ஆகிய தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்திட சென்றுள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று முன்தினம் (27.3.2024) காலை, விருதுநகரில், பல்வேறு சங்க நிர்வாகிகள் மற்றும் முக்கியமானவர்கள் நேரில் சந்தித்து, ‘இந்தியா’ கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.





முதலமைச்சர் கழகத் தலைவர்அவர்களை நேற்று முன்தினம் (27.03.2024) விருது நகரில் சந்தித்த முக்கிய பிரமுகர்கள் வருமாறு:

**விருதுநகர் மாவட்டம்**

சிவகாசி பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தினர் மற்றும் தொழிலதிபர்கள் 12 பேர் சந்தித்து அரசு செய்து வரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்து ஆதரவு தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த தென்னிந்திய உலோக கொள்கலன் உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த சண்முகசுந்தரம்,

பருப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த செந்தில் மற்றும் விவேகானந்தம்,

தனியா உற்பத்தியாளர் வணிக சங்கத்தைச்சேர்ந்த V.S.R.ராதாகிருஷ்ணன் மற்றும் செளந்தரபாண்டியன், விருதுநகர் வர்த்தக சபையைச் சேர்ந்த பவளம் சத்யமூர்த்தி,

மிளகாய் வர்த்தக சபையைச் சேர்ந்த ஆனந்த்.

**தென்காசி மாவட்டம்**

தென்காசி மாவட்ட வணிக சங்கத்தைச் சேர்ந்த வைகுண்டராஜா,

செங்குந்த முதலியார் சங்கத்தைச் சேர்ந்த சங்கர சுப்பிரமணியன்,

ஜவுளி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் சுப்பிரமணியன்,

யாதவர் சங்கத் தலைவர் குருசாமி அவர்களின் மனைவி திருமதி வேலம்மாள்,

புளியங்குடி பள்ளிவாசல் ஜமாத் கமிட்டித் தலைவர் மௌலூல் கவுமி.

மேலும், விருதுநகர், தென்காசி மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஈ.ராஜா, எம்.எல்.ஏ., ‘இந்தியா’ கூட்டணியின் தென்காசி தொகுதி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார். விருதுநகர் தொகுதி வேட்பாளர் மாணிக்கம் தாகூர் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### ஜனநாயகத்தை மீட்டு இந்தியாவைக் காப்பாற்ற - மோடியை வீட்டுக்கு அனுப்ப

# இந்த நாடாளுமன்றத் தேர்தலே கடைசி வாய்ப்பு!

## தொழிலாளர்கள் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரிப்பீர்!

### தமிழ்நாடு விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

*சென்னை, மார்ச் 29 -*

ஜனநாயகத்தை மீட்டு இந்தியாவை காக்க இந்த நாடாளுமன்ற தேர்தலே கடைசி வாய்ப்பு! மீண்டும் மோடி வந்தால் நல வாரியங்கள் முடக் கப்படும். எனவே திண்ணைப் பிரச்சாரம் மூலம் தொழிலாளர்களின் வாக்குகளை சேகரிப்பீர் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியினருக்கு தலைவர் பொன்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அவரது வேண்டுகோள் வருமாறு:

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் என்பது ஜனநாயகத்தை மீட்டு இந்தியாவை காப்பாற்றுவதற்கான கடைசி வாய்ப்பாகும். இதனை இந்திய வாக்காளர்கள் ஒவ்வொருவரும் மனதில் கொண்டு வாக்களித்திட வேண்டும். மாநில உரிமைகள் பறிக்கப்படுதல், ஆளுநர்கள் மூலம் மாற்று கட்சி ஆட்சிகளை அடக்கி, ஆள நினைப்பது, ஜி.எஸ்.டி. மூலம் சுரண்டப்பட்ட நிதியில் உரிய பங்கை மாநிலங்களுக்கு வழங்காத கொடூரம் இப்படி ஒரு மோசமான ஒன்றிய அரசை இதுவரை இந்தியா கண்டதில்லை. ஆகவே மோடி அரசு அகற்றப்பட்ட வேண்டும்.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவே பின்பற்றக் கூடிய அளவிற்கு முற்போக்கானத் திட்டங்களையும், சமூக நீதி செயல்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறார். அதனுடைய விளை வாகத்தான் இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் நிலையை அடைந்துள்ளார்.

தமிழ்நாட்டில் மட்டும் தான் தொழிலாளர் துறையின் கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உள்ளிட்ட 18 வாரியங்கள் செயல்படுகின்றன. கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் முடங்கி கிடந்த நல வாரியங்கள் தற்போது திராவிட மாடல் ஆட்சியில் நல வாரியங்கள் முழு வீச்சில் செயல்படுகின்றன. அனைத்து நலத்திட்ட உதவிகளும் இரட்டிப்பாக உயர்த்தப்பட்டுள்ளன.

கட்டுமானத் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்ள 4 லட்ச ரூபாய் இலவசமாக வழங்கப்படுகிறது. நிரந்தரமாக குணப்படுத்த முடியாத நோயாளிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரி, ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். போன்ற கல்லூரியில் படிக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி கட்டணம், விடுதி கட்டணம் அனைத்தையும் வாரியம் ஏற்றுக் கொள்கிறது. இப்படி பல்வேறு புதியத் திட்டங்கள் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டு, வாரியங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

எனவே தமிழ்நாடு முழுவதும் கோடிக்கணக்கில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுபவர்கள், வீட்டுப் பணியாளர்கள், தையல் தொழிலாளர்கள், சலவை தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர் போன்ற அமைப்புசாராத் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்து இந்த தேர்தலில் தங்களுடைய வாக்குகள் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அணிக்கே என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கிராமம் கிராமமாக சென்று தொழிலாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று வாரியத்தின் பயன்களும், மீண்டும் மோடி அரசு வந்தால் வாரியம் முடக்க ப்பட்டு விடக்கூடிய அபாயத்தையும் விளக்கி சொல்லி அவர்களை தி.மு.க. அணிக்கு வாக்களிக்க செய்திட திண்ணைப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் அனைத்து மாவட்டங்களுக்கும் திமுக அணிக்கு வாக்கு சேகரிக்க, பிரச்சாரம் மேற்கொள்ள வர இருக்கிறேன்.

இவ்வாறு பொன்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



நெல்லிக்குப்பம் கீரை மார்க்கெட் சின்ன தெரு ஜும்மா பள்ளிவாசலில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி முன்னாள் தி.மு.க. நகர கழக அவைத் தலைவர் யாசின் ஹாஜார் அழைப்பின் பேரில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.க. கொள்கை பரப்பு துணை செயலாளருமான நெல்லிக்குப்பம் புகழேந்தி தலைமையில் தி.மு.க. மாநில பொதுக்குழு உறுப்பினர் ராதாகிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தி.மு.க. மாவட்ட பிரதிநிதிகள் வேலு, வீரமணி, கதிரேசன், முன்னாள் நகர துணைச் செயலாளர் விஜயக்குமார், கவுன்சிலர்கள் சரவணன், ஸ்ரீதர், பூபாலன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சபா, மாறன், முஸ்தபா, நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா, வார்டு கழக செயலாளர்கள் அருண், தேவா, அருள், ரமேஷ், ராஜாராம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# நாட்டைக் காப்பாற்ற மோடி அரசைத் தூக்கி எறிய வேண்டும்!

## காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக் அறிக்கை!

புதுடெல்லி, மார்ச் 29-

நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எனில், மோடி அரசை ஆட்சியில் இருந்து தூக்கி எறியுங்கள் என்று நாட்டு மக்களுக்கு ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்திய பால் மாலிக் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மோடி அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் இருண்டதாகி விடும் என்று நாட்டு மக்களுக்கு எச்சரித்துள்ளார். ஒன்றியத்தில் ஆட்சியில் உள்ளவர்கள் நாட்டை குழிதோண்டிப் புதைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும், மோடி ஆட்சியில் ஒட்டுமொத்த தேசமும் ஒருசில முதலாளிகளால் சூறையாடப்படு கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையவும், நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கவும் மோடி அரசை வீழ்த்துங்கள் என்று நாட்டு மக்களுக்கு சத்யபால் மாலிக் அறிவுறுத்தியுள்ளார்.

பணவீக்கத்தில் இருந்து விடுபட்டு, இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எனில், மோடி அரசை ஆட்சியில் இருந்து தூக்கி எறியுங்கள் என்றும்,

நாடாளுமன்றத் தேர்தலில் ஜாதி மதத்தை மறந்து பா.ஜ.க.வை படுமோசமாக தோல்வி அடையச் செய்ய வேண்டும் என்றும் நாட்டு மக்களுக்கு சத்யபால் மாலிக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் வாய்ப்பை, நாட்டு மக்கள் தவறவிட்டால் எதிர்காலத்தில் உங்களுக்கு வாக்குரிமை கிடைக்காது என்றும் ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் எச்சரித்துள்ளார்.




புதுக்கோட்டை காந்திநகர் புனித அந்தோணியார் கோவில் வளாகத்தில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கவிச்சுடர். கவிதைப்பித்தன் ஏற்பாட்டில், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையிலும், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையிலும், வெற்றி வேட்பாளர் துரை வைகோவை ஆதரித்து. 14.28.31.32.33.40.42. ஆகிய வட்டக் கழகங்களில் செயல்வீரர்கள் கூட்டம் பிரம்மாண்டமாக நடைபெற்றது. நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., அரு.வீரமணி, பி.டி.அரசகுமார், ஆ.செந்தில், திலகவதி செந்தில், எம்.லியாகத் அலி. த.சந்திரசேகரன், சுப.சரவணன். வி.என்,மணி, செ.அசோக்பாண்டியன். முருகேசன், செங்கோடன், கவிவர்மன், எஸ்.கே.கலியமூர்த்தி, அப்துல்கனி, அஸ்ரப்அலி, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, சு.சண்முகம், மு.க.ராமகிருஷ்ணன், க,நைனாமுகமது, எம்,எம்.பாலு, இராசு, சந்தோஷ், என்.சாத்தையா, சி.ஆர்.வீ.சித்ரா அ.ரெத்தினம், மா.மணிவேலன், ஆ.ஜேம்ஸ் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



நீலகிரி தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிடும் கழக துணை பொது செயலாளர் ஆ.ராசா நேற்று முன்தினம் தனது வேட்பு மனுவை நீலகிரி மாவட்ட ஆட்சியரும் தேர்தல் அதிகாரியுமான அருணாவிடம் தாக்கல் செய்து உறுதி மொழி ஏற்றார். உடன் மாவட்டச் செயலாளர் முபாரக், அமைச்சர் க.இராமச்சந்திரன், கணேஷ் எம்.எல்.ஏ., திருப்பூர் மாவட்டக் கழகச் செயலாளர் செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



'இந்தியா' கூட்டணி சார்பில், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் வெற்றி வேட்பாளர் தொல்.திருமாவளவன் அவர்கள் பேரறிஞர் அண்ணா,அம்பேத்கர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தோழமைக் கட்சி நிர்வாகிகளுடன் ஊர்வலமாகச் சென்று அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். இந்நிகழ்வில் கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆ.சங்கர் ஆகியோர் உள்ளனர்.



'இந்தியா' கூட்டணியின் கரூர் நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் செ.ஜோதிமணி தனது வேட்பு மனுவை, அமைச்சர்கள் அர. சக்கரபாணி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், கரூர் மாவட்ட தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் எம்.பி. எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் கரூர் தொகுதி தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான மீ.தங்கவேலிடம் தாக்கல் செய்தார்.

### பா.ஜ.க., அ.தி.மு.க.விற்குப் பாடம் புகட்ட - இந்தத் தேர்தலில்

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வீர்!

## எட்டயபுரத்தில் கனிமொழி கருணாநிதி பேச்சு!

தூத்துக்குடி, மார்ச் 29 -

நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.விற்கும் அ.தி.மு.க. விற்கும், தகுந்த பாடம் புகட்டிட, 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வெற்றி பெறச் செய்வீர் என்று வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி பேசினார்.

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே சிந்தலக்கரையில், தூத்துக்குடி மக்களவைத் தொகுதி திமுக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் ராமநாதபுரம் மக்களவைத் தொகுதி ஐயுஎம்எல் வேட்பாளர் நவாஸ் கனி ஆகியோரை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்.

பிரச்சார கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி பேசியது வருமாறு : -

இந்திய நாட்டை பாசிசத்தின் பிடியிலிருந்து மீட்டெடுக்க உதித்து இருக்கக் கூடிய சூரியன் திராவிட நாயகன், நம்முடைய முதலமைச்சர்.

சில மாதங்களுக்கு முன்னால் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்கள் எல்லாம் இந்த கரிசல் பூமி கண்ணீரில் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் ஒன்றிய அரசு கைக்கட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால், நான் இருக்கிறேன் உன்னுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு என்று கருணையோடு ஓடிவந்தது நம்முடைய முதலமைச்சர் தான். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர் எந்த பகுதியிலிருந்தாலும் நிவாரணம் வழங்கியது நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மட்டும் தான். வீடு இடிந்தவர்களுக்கு, இந்தியச் சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு 4 லட்சம் ரூபாய் வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு, நம்முடைய முதலமைச்சர்.



அதேபோல பாதிக்கப்பட்ட விவசாயிகளாக இருக்கட்டும், ஆடு மாடுகளை இழந்தவர்களாக இருக்கட்டும், மாணவர்களாக இருக்கட்டும், வியாபாரிகளாக இருக்கட்டும் அத்தனை பேருக்கும் உதவிக்கரம் நீட்டுவது நம்முடைய முதலமைச்சர். இங்கே ஓட்டு கேட்க மட்டுமே வந்து கொண்டிருக்கக் கூடிய பிரதமர் தமிழ்நாட்டுக்கு நிவாரண நிதியும் கொடுக்கவில்லை, நமக்கு வரவேண்டிய நிதியையும் தருவதில்லை. நம்ம கிட்ட இருந்து வாங்குகின்ற வரியைக் கால்வாசி கூட திருப்பி கொடுக்கவில்லை. 1 ரூபாய் வாங்கினால் 29 பைசா தான். ஆனால் உத்தரப்பிரதேச அரசுக்கு 2 ரூபாய் 2 பைசா,

இப்படி தமிழ்நாட்டை வஞ்சித்துக் கொண்டிருக்கக் கூடிய ஓர வஞ்சனை செய்து கொண்டிருக்கக் கூடிய பாஜகவுக்கு, அவர்களோடு இத்தனை ஆண்டுகளாக அவர்கள் எடுத்த மக்களுக்கு விரோதமான, சிறுபான்மை விரோதமான, விவசாயிகளுக்கு விரோதமாக இருக்கக்கூடிய அத்தனை சட்டங்களையும் ஆதரித்து வாக்களித்து இன்று பிரிந்து விட்டோம் என்று நாடகமாடிக் கொண்டிருக்கக்கூடிய அதிமுக இரண்டு பேருக்கும் நாம் நல்ல பாடத்தைச் சொல்லித் தரக்கூடிய தேர்தல் இந்த தேர்தல் என்பதை உணர்ந்து கொண்டு இந்தத் தேர்தலிலே நாம் பணியாற்ற வேண்டும்.

ஒன்றே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன் பிரதமர் மோடி என்ன சொன்னார் 75 ஆண்டுகள் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது இந்தியா உலகத்திலேயே பொருளாதாரத்தில் மூன்றாவது இடத்தில் முன்னேறிய நாடாக இருக்கும் என்று, அவருடைய சாதனை என்ன என்றால், இன்றைக்கு இந்தியா பசி குறியீடு, உலக பசி குறியீடு (Global hunger index) அதில் பார்த்தால் 111வது இடம். நமக்கு மேலே நேபால், பங்களாதேஷ், பாகிஸ்தான் இருக்கிறது. இது தான் அவர்கள் செய்திருக்கக்கூடிய சாதனை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டில் நம்முடைய முதலமைச்சர். இங்கே பசி என்பது கிடையாது. தமிழ்நாட்டில் காலையில் பள்ளிக்கு வரக் கூடிய மாணவர்கள் கூட பசியோடு இருந்துவிடக்கூடாது என்பதற்காகக் காலை உணவுத் திட்டத்தை உருவாக்கி வழங்கி இருக்கக் கூடிய வள்ளல் நம்முடைய முதலமைச்சர். இதுதான் திராவிட மாடல் ஆட்சி யாரும் பசியோடு உறங்கச் செல்லக்கூடாது, யாரும் பசியோடு இருக்கக் கூடாது, மாணவர்கள் உயர வேண்டும், படிக்க வேண்டும் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சி.

பசி என்பதைப் பற்றி கவலை கிடையாது யார் பட்டினி கிடந்தாலும் கவலை கிடையாது எங்களுடைய அரசியல் எங்களுடைய மத அரசியல் அது மட்டும் தான் எங்களுக்கு முக்கியம் என்று நினைத்துக் கொண்டிருக்கக் கூடிய பாஜகவுக்கு மதத்தின் பெயரால் மக்களைப் பிரித்துக் கூடிய பாஜகவுக்கு இந்த தேர்தலில் நாம் ஒரு சரியான பாடத்தை கற்றுத் தர வேண்டும்.

இந்த நேரத்திலே மீண்டும் முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தூத்துக்குடிக்கு எப்பொழுதுமே ஒரு அன்போடு நாங்கள் வைக்கக்கூடிய கோரிக்கை எல்லாம் நிறைவேற்றித் தரக்கூடிய நம்முடைய முதலமைச்சர். சமீபத்தில் வின் பாஸ்ட என்ற உலகத்தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய கார் நிறுவனத்தை தூத்துக்குடி மக்களுக்காக வழங்கி இருக்கிறார்கள். அந்த நிறுவனம் தூத்துக்குடியில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு மட்டுமல்ல, ராமநாதபுரத்தில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கும் இளம்பெண்களுக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும் இதுதான் நம்முடைய முதல்வர் ஆட்சி இளைஞர்களுடைய எதிர்காலத்தை உருவாக்கிக் காட்டக்கூடிய மேம்படுத்தக்கூடிய ஆட்சி அந்த முதலமைச்சர் அவர்களுடைய வேட்பாளராக நின்று உங்களிடம், உங்களுடைய பொன்னான வாக்குகளை உங்களுடைய உயர்ந்த வாத்துகளை உதய சூரியன் சின்னத்தில் அளித்து மீண்டும் உங்களோடு பணியாற்றக்கூடிய ஒரு வாய்ப்பை எனக்கு அளிக்க வேண்டும் .

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசினார்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

# மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவில் தேர்தல் நடைபெறாது!

## சிவகங்கையில் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரத்தை ஆதரித்து

## ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேசுகையில் உறுதி!

சிவகங்கை, மார்ச் 29 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்ற தொகுதியில் இண்டியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கார்த்திப. சிதம்பரத்தை ஆதரித்து புதுவயல், காரைக்குடி, தேவகோட்டை ஆகிய ஊர்களில் இண்டியா கூட்டணி கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட கழக செய லாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி. எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. ஆகியோர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பேசினார்கள்.

கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுப.சின்னத்.துரை,கே.ஆர். ஆனந்த், லெ.மு. ரவிச்சந்திரன், நாகனிரவி, பூபாலசிங்கம் நா.நெடுஞ்செழியன், குன்னக் குடி சுப்பிரமணியன், நகர்கழக செயலாளர்கள் என். குணசேகரன், பெரி. பாலா, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி ஜெ. மதார்சேட், மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ். முத்து துரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் அசோக், பக்ருதீன்அலி, பாலையா, ராசு, மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் உட்பட இண்டியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், சொ.கண்ணன், சாகீர்உசேன், அழகையா, சேவியர், அன்பு. செல்வன், துரை.நாகராசன், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. பேசியதாவது.



வருகிற ஏப்ரல் 19ம்தேதி நடைபெறும் தேர்தல் முக்கியமான தேர்தலாகும். நாட்டில் யார் ஆட்சி செய்ய வேண்டும் யார் ஆட்சி செய்யக்கூடாது என்பதைமுடிவுசெய்யும் தேர்தலாகும். முந்தைய தேர்தல்களை விட இது மாறுபட்ட தேர்தல் ஆகும். இண்டியா கூட்டணி நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமை.யிலான இண்டியா கூட்டணி புதுவை உட்பட 40 இடங்களிலும் வெற்றி பெறும். இதற்காக தீவிரமாக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் பிரச்சா ரத்தினை செய்து வருகிறார். கூட்டணி கட்சி தோழர்களும் ஒற்றுமையுடன் தேர்தல் பணியாற்றிட வேண்டும். அ.தி.மு.க. விற்கும் பா.ஜ.க.விற்கும் ரகசியமான உறவு உள்ளது. பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்று கூறும் முன்னாள் முதல்வர் எடப்பாடி பிரதமர் மோடி ஆட்சி குறித்து இதுவரை விமர்சிக்க வில்லை.

அவர்களுக்குள் ரகசிய உறவு உள்ளது. மீண்டும் பிரதமராக மோடி அமர்ந்தால் நாட்டில் தேர்தல் நடைபெறாது. சர்வாதிகார ஆட்சி தான் நடைபெறும். எனவே இந்தியாவை காப்பாற்ற இந்திய ஜனநாயகத்தை காப்பாற்ற நாம் அனைவரும் இண்டியா கூட்ட ணிக்கு வாக்களிக்க வேண்டும். இண்டியா கூட்டணி ஆட்சி அமைந்தால் அனைத்து மாநிலங்களும் சமமாக கருதப்படும். பாரபட்சம் பார்க்கமாட்டார்கள். பறிக்கப் பட்ட மாநில உரிமைகள் மீண்டும் மாநிலத்திற்கே தரப்படும். மாநிலத்திற்கு தேவையான நிதிஉதவிகள் பாரபட்சமின்றி வழங்கப்படும். ஜனநாயகம் பாதுகாக்கப்படும் மதச்சார்பின்மை காப்பாற்றப்படும். தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி உள்ளார். இத்தேர்தலில் அவைகள் மக்களிடம் எடுத்துக்கூறி வாக்குகள் சேகரிக்க வேண்டும்.

எனவே அனைவரும் இண்டியா கூட்டணிக்கு வாக்களிக்கு மாறு நாம் மக்களை சென்று சந்தித்து வாக்குகள் திரட்ட வேண்டும். இவ்வாறு ப. சிதம்பரம் எம்.பி பேசினார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பேசியதாவது. தமிழக முதல்வர் தளபதி அவர்கள் வலுவான இண்டியா கூட்டணியை அமைத்துள்ளார். தளபதி வித்திட்ட விதைதான் இன்று இந்தியா முழுவதும் இண்டியா கூட்டணியாக மலர்ந்துள்ளது. தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் அகில இந்திய அரசியலில் இன்று தமிழக முதல்வர் அவர்கள் முக்கிய புள்ளியாக கருதப்படுகிறார். தமிழக முதல்வர் தளபதி இல்லாமல் இந்திய அரசியல் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பிரதமர்மோடி நமது முதல்வர் மீது கோபத்தில் உள்ளார். அ.தி.மு.க. பா.ஜ.க விற்கும் ரகசியமான உறவு உள்ளது. பொதுக் கூட்டங்களில் பேசும் முன்னாள் முதல்வர் எடப்பாடி தி.மு.க.வை மட்டும் விமர்சிக்கிறார். இது பாராளுமன்ற தேர்தல் என்று அவருக்கு நினைவுபடுத்த வேண்டும். பாஜகவையோ பிரதமர் மோடி பற்றியோ எந்த பேச்சும் பேசுவதில்லை. கடந்த 10 ஆண்டுகளில் பா.ஜ.க.வும் கடந்த நான்கரை ஆண்டுகளில் அ.தி.மு.க.வும் பல்வேறு ஊழல்புரிந்தும் மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளனர். அதை நாம் கூட்டணி கட்சியினர் மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். இத்தொகுதியில் இண்டியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரத்தை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு தீவிரமாக தேர்தல் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசினார்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க.வேட்பாளர் கே.என்.அருண்நேரு, பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட கவுல்பாளையம் கிராமத்தில் பொதுமக்களிடம் வீதி, வீதியாகச் சென்று வாக்குகள் சேகரித்தார். அப்போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன்

## 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - | ஈரோடு |
| 30.03.2024 (சனிக்கிழமை) | - | சேலம் |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | திருச்சி |
| 03.04.2024 (புதன் கிழமை) | - | சிதம்பரம் |
| 06.04.2024 (சனிக் கிழமை) | - | சென்னை, திருபெரும்புதூர் |
| 07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) | - | சென்னை |
| 10.04.2024 (புதன் கிழமை) | - | மதுரை |
| 11.04.2024 (வியாழக் கிழமை) | - | தூத்துக்குடி |
| 14.04.2024 (ஞாயிற்றுக் கிழமை) | - | திருப்பூர் |
| 15.04.2024 (திங்கட் கிழமை) | - | கோவை |
| 16.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | பொள்ளாச்சி |



தருமபுரி நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி,மற்றும் கிருஷ்ணகிரி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கோபிநாத் ஆகியோரை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபட தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும் முதலமைச்சர் – கழக தலைவர் அவர்களின் பிரச்சார மேடை அமைக்கும் பணியினை தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.உடன் நகர செயலாளர் நாட்டான் மாது,பொருளாளர் தங்கமணி,நகர துணை செயலாளர் முல்லைவேந்தன்,ஒன்றிய செயலாளர் ஏ.எஸ்.சண்முகம்,மாநில பொதுக்குழு உறுப்பினர் பி.சி.துரைசாமி,மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## அரக்கோணம் தொகுதியில் – எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மக்கள் வெள்ளத்தில் வாக்குச் சேகரிப்பு!



## வேலூர் தொகுதியில் – கதிர் ஆனந்தை ஆதரித்து

# மக்கள் கடலிடையே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!





முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ‘இந்தியா’ கூட்டணி சார்பில் கோவை நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கணபதி பா.ராஜ்குமார் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோவை மாவட்ட ஆட்சியரும் தேர்தல் நடத்தும் அதிகாரியுமான கிராந்திகுமார் பாடியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கோவை மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் காங்கிரஸ் மயூரா ஜெயக்குமார், பி.ஆர்.நடராஜன் எம்.பி. ஆகியோர் உடனிருந்தனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ திட்டங்கள்!

# தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல - இந்திய முன்னேற்றத்திற்கும் திசைகாட்டிகள்!

தமிழ்நாடு இன்று பல்வேறு துறைகளிலும் இந்தியாவின் முன்னணி மாநில மாகத் திகழ்கிறது. சில துறைகளில் இந்தியாவில் முதலிடம் பெற்ற மாநிலமாகவும் விளங்குகிறது.

இதற்கு தமிழ்நாட்டில் நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்த சாதி ஆதிக்க ஏற்றத் தாழ்வுகளையும் ஆண், பெண் பாலின வேறுபாடுகளையும் அகற்றி எல்லோரும் எல்லாம் பெற வழிவகுக்கும் திராவிட மாடல் அரசின் திட்டங்களே காரணம் ஆகும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில் 14 வயது முதல் அரசியல் கலையில் பயிற்சிகள் பெற்று 23 முறை கைது செய்யப்பட்டுச் சிறைத் தழும்புகளை ஏற்றுப் பழுத்த அனுபவங்கள் வாய்க்கப் பெற்றவர் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

2021 மே திங்கள் 7ஆம் நாள் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற திராவிட நாயகர் அவர்கள் முதல் கையெழுத்தாக மகளிருக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் - விடியல் பயணம்திட்டத்தைச் செயல்படுத்திட ஆணையிட்டு நடைமுறைப் படுத்தினார். அத்திட்டத்தின் மூலம், இதுவரை ஏழத்தாழ 450 கோடி முறை பெண்கள் பயணம் செய்து மாதம்தோறும் 888 ரூபாய் சேமித்திட வழிவகை செய்துள்ளார்.

பிறந்தது முதல் தந்தை கையையும், திருமணத்திற்குப்பின் கணவன் கையையும், வயதான பின் மகன் கையையும், எதிர்பார்த்துத் தான் பெண்கள் சமுதாயம் வாழ வேண்டிய நிலைமையுள்ளது. இந்த நிலை மாறி சுயமரியாதையுடன் வாழ பெண்கள் கல்வி பெற வேண்டும்; வேலைக்குச் செல்ல வேண்டும்; சுயமாகத் தொழில் புரிய வேண்டும்; பொருளாதாரச் சுதந்திரம் பெண்களுக்கு வேண்டும் என்றார் பெரியார்.

பெரியார் குருகுலத்தில் தங்கிப் பயின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் தந்தை பெரியார் அவர்களின் சிந்தனைகள் வழியே மகளிர்க்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வியை நடைமுறைப்படுத்தியும் பின்னர் பட்ட மேற்படிப்பு வரை நீட்டித்தும், சொத்துரிமைச் சட்டம் நிறைவேற்றியும், அரசுப் பணிகளில் 30 சதவீத இட ஒதுக்கீடுகளை வழங்கியும், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடுகள் தந்தும் பெண்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துள்ளார்.

தொழில் மனைகளில் மகளிர்க்கு 10 சதவீத மனைகளை ஒதுக்கீடு செய்து பெண்களைத் தொழில் முனைவோர் ஆக்கிய பெருமையும் திராவிட இயக்கத்திற்கே உண்டு. தருமபுரியில் தொடங்கப்பட்ட மகளிர் திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் சுய உதவி குழுக்களாகப் பரிணமித்து இன்று கிராமப்புற மகளிர் இடையே பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தி மாபெரும் வெற்றியைக் கண்டுள்ளது.

50 வயது கடந்தும் திருமணமாகாத மகளிருக்கு மாதந் தோறும் உதவித் தொகை ரூ.500 வழங்கும் திட்டத்தை 2010இல் நடைமுறைப் படுத்தி, தற்போது தொகையை ரூ.1200 என உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களோடு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாள் முழுவதும் குடும்பத்திற்காக உழைத்து வரும் மகளிர்க்குத் தன்னம்பிக்கை அளித்திட உதவித் தொகையாக அல்ல; உங்களுக்கு இது உரிமைத் தொகை என்று சொல்லி 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் மிகப் பெரிய திட்டம் நிறைவேற்றி மகளிர் பொருளாதார நிலையை உயர்த்தியுள்ளார்.

அரசுப் பள்ளிகளில் படித்துக் கல்லூரியில் சேர்ந்துள்ள 4.82 இலட்சம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நிதி வழங்கும் புதுமைப் பெண் திட்டம் நிறைவேற்றப்பட்டு, ஏறத்தாழ 3 இலட்சம் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தையும் அறிவித்துள்ளார்.

இத்திட்டங்களின் காரணமாகப் பள்ளிப்படிப்பை முடித்துக் கல்லூரிகளில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை தேசிய அளவில் 26 சதவிகிதம் என குறைந்திருக்க, தமிழ்நாட்டில் மட்டும் 52 சதவீதம் என உயர்ந்து மிகப்பெரிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இத்திட்டங்களால் குடும்பங்களின் பொருளாதாரச் சுமை அகற்றப்பட்டு, மாணவச் செல்வங்கள் தடையின்றி கல்வி கற்றிடும் இனிய சூழ்நிலைகள் வளர்ந்துள்ளன. இது திராவிட மாடல் அரசின் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் கிடைத்துள்ள மாபெரும் வெற்றியாகும்.

முதலமைச்சர் அவர்களின் பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டத்தில், 18 லட்சம் மாணவமாணவிகள் பயன் பெறுகின்றனர். இத்திட்டம் செயல்படுத்தப்படும் முறைகளை நேரில் வந்து பார்வையிட்ட தெலுங்கானா மாநில அரசு அதிகாரிகள் இத்திட்டம் இந்தியாவுக்கே வழிகாட்டும் திட்டம் எனக் கூறி பாராட்டினர். இதனால்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு இந்தியா முழுவதும் பாராட்டப்படுகிறது. இந்திய மாநிலங்கள் எல்லாம் திராவிட மாடல் அரசின் திட்டங்களை வரவேற்றுப் பின்பற்றுகின்றன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்கள் இன்றைய நிலையில் தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல; ஒட்டு மொத்த இந்தியாவின் முன்னேற்றத்திற்கே வழிகாட்டும் திட்டங்களாகும்.

## நெல்லிக்குப்பம் சின்னதெரு

# பள்ளிவாசலில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

### நெல்லிக்குப்பம் புகழேந்தி - கழகத்தினர் பங்கேற்பு!

நெல்லிக்குப்பம், மார்ச் 29- நெல்லிக்குப்பம் கீரை ஜும்மா மார்க்கெட் சின்ன தெரு பள்ளிவாசலில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. முன்னாள் தி.மு.க. நகர கழக அவைத் தலைவர் யாசின் ஹாஜார் அழைப்பின் பேரில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.க. கொள்கை பரப்பு துணை செயலாளருமான நெல்லிக்குப்பம் புகழேந்தி தலைமையில் தி.மு.க. மாநில பொதுக்குழு உறுப்பினர் ராதா கிருஷ்ணன் முன்னிலையில் இப்தார் நோன்பு கஞ்சி குடித்து நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்தது.

தி.மு.க. மாவட்ட பிரதிநிதிகள் வேலு, வீரமணி, கதிரேசன், முன்னாள் நகர துணைச் செயலாளர் விஜயக்குமார், கவுன்சிலர்கள் சரவணன், ஸ்ரீதர், பூபாலன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சபா, மாறன், முஸ்தபா, நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா, வார்டு கழக செயலாளர்கள் அருண், தேவா, அருள், ரமேஷ், ராஜாராம் உள்ளிட்ட நிர்வாகிகள் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



நாமக்கல் அடுத்த மோகனூரில் நாமக்கல் கிழக்கு மாவட்டம் மோகனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இக்கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், ஒன்றிய செயலாளர் பெ.நவலடி, பேரூர் செயலாளர் செல்லவேல் மற்றும் மாவட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.





நீலகிரி மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் உதகை ஜெம் பார்க் கூட்ட அரங்கில் மாவட்ட தி.மு.க.செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில், தேர்தல் பணி செயலாளர், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், கூடலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பல்லவிராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது, நீலகிரி தொகுதி பொறுப்பாளர் கருணாநிதி அனைவரையும் வரவேற்றார். நீலகிரி நாடாளுமன்ற தொகுதி INDIA கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் ஆ.இராசா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

## மாவட்டச் செயலாளர் பா. மு.முபாரக் - அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலை! :

# நீலகிரி மாவட்ட தி.மு.க. - தோழமைக் கட்சி நிர்வாகிகள் கூட்டம்!

### வேட்பாளர் ஆ.இராசா சிறப்புரை!

*நீலகிரி, மார்ச் 29-*

நீலகிரி மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் உதகை ஜெம் பார்க் கூட்ட அரங்கில் மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில், தேர்தல் பணி செயலாளர், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், கூடலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பல்லவிராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது, நீலகிரி தொகுதி பொறுப்பாளர் கருணாநிதி அனைவரையும் வரவேற்றார்.

நீலகிரி நாடாளுமன்ற தொகுதி INDIA கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் ஆ.இராசா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில், மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்ச்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திராவிட மணி, இளங்கோவன், காசிலிங்கம், செந்தில் ரங்கராஜ், ராஜு, மாநில அணிகளின் துணை செயலாளர்கள் பொந்தோஸ், அன்வர்கான், வாசிம்ராஜா, பரமேஷ்குமார், காங்கிரஸ் மாவட்ட தலைவர் கணேஷ், AICC உறுப்பினர்கள் கோசி பேபி, சுப்ரமணியம்,

சி.பி.எம் மாவட்ட செயலாளர் பாஸ்கரன், நாகராஜ், சி.பி.ஐ மாநில குழு உறுப்பினர் பெள்ளி, கனி, முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் வாப்பு ஹாஜி, மாவட்ட செயலாளர் அனீபா, ம.தி.மு.க. மாவட்ட பொறுப்பாளர் சிவகுமார், செயற்குழு உறுப்பினர் ஆரிப் சேட், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் அப்துல் சமது, மாவட்ட செயலாளர் அபுதாகீர், மக்கள் நீதி மய்யம் மாவட்டச் செயலாளர்கள் ஜாகிர் ஹாசன், சித்திக், மனித நேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் தமீமுன் அன்சாரி, திராவிட தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் அர்ஜுனன் ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் ஆலோசனைகளை வழங்கினர்.

கூட்டத்தில் தி.மு.க. நகர ஒன்றியபேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் தி.மு.க. தோழமை கட்சிகளின் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது!

### ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒப்புதல் - இளைஞர்கள் அதிர்ச்சி!

புதுடெல்லி, மார்ச் 29 -

ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும் என்ற வாக்குறுதி அளித்து ஒன்றியத்தில் ஆட்சிக்கு வந்த பிரதமர் மோடி, 10 ஆண்டுகளில் ஒருவருக்கு கூட வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தராமல் பொதுமக்களிடம் கடும் அதிருப்தியை சம்பாதித்து வைத்துள்ளார்.

வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருவதாக பொய் வாக்குறுதி அளித்த பிரதமர் மோடிக்கு, நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியை பரிசாக அளித்து தக்க பாடம் புகட்ட வேண்டும் என பொதுமக்களுக்கு எதிர்க்கட்சியினர் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இந்தச்சூழலில் நாட்டின் வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று ஒன்றிய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் அனந்த நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அனைத்து சமூக, பொருளாதார பிரச்சினைக்கும் ஒன்றிய அரசு தீர்வு காண வேண்டும் என எதிர்பார்ப்பது தவறானது என்றும், தனியார் நிறுவனங்கள்தான் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி பணியமர்த்தலை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகரின் கருத்து மூலம், வேலையில்லா திண்டாட்டத்தை ஒன்றிய அரசால் சரி செய்ய முடியவில்லை என்பது தெளிவாகியுள்ளது. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்ற பிரதமர் மோடியின் வாக்குறுதி தோல்வியடைந்திருப்பது இதன்மூலம் அம்பலமாகியுள்ளது.





தஞ்சைநாடாளுமன்றத்தொகுதியின்‘இந்தியா’கூட்டணிகட்சியின்கழகவேட்பாளர்ச.முரசொலிதஞ்சாவூர்மாவட்டஆட்சியரகத்தில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் து.கிருஷ்ணசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் மு.பாரதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் ஜெயசங்கர் உள்ளிட்டோர் உள்ளனர்.



## 2024 நாடாளுமன்றத் தேர்தல் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ‘இந்தியா கூட்டணி’ வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 2–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

### 29.03.2024, வெள்ளிக்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | ஹரிஹரன் பஜார் வீதி, பொன்னேரி, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். | திருவள்ளூர் |
| 2 | காலை 11.30 மணி | மாநகராட்சி அலுவலகம் அருகில், ஆவடி, திருவள்ளூர் மத்திய மாவட்டம். | திருவள்ளூர் |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 3 | மாலை 4.30 மணி | நீதிமன்றம் எதிரில், ஆலந்தூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | ஸ்ரீபெரும்புதூர் |
| 4 | மாலை 5.30 மணி | பழைய டிரங்க் சாலை, பல்லாவரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | ஸ்ரீபெரும்புதூர் |
| 5 | இரவு 6.30 மணி | காந்தி மார்க்கெட், தாம்பரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | ஸ்ரீபெரும்புதூர் |
| 6 | இரவு 7.30 மணி | பாவேந்தர் சாலை, மறைமலைநகர் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | காஞ்சிபுரம் |

### 30.03.2024, சனிக்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | அண்ணா பேருந்து நிலையம் அருகில், மதுராந்தகம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் | காஞ்சிபுரம் |
| 2 | மதியம் 12.00 மணி | நான்கு முனை சிக்னல் சந்திப்பு, விழுப்புரம், விழுப்புரம் தெற்கு மாவட்டம். | விழுப்புரம் |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 3 | மாலை 4.30 மணி | மணிக்கூண்டு சாலை, உளுந்தூர்ப்பேட்டை, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம். | விழுப்புரம் |
| 4 | மாலை 5.30 மணி | கடைவீதி, விருத்தாசலம், கடலூர் மேற்கு மாவட்டம். | கடலூர் |
| 5 | இரவு 7.00 மணி | நான்கு சாலை சந்திப்பு, ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் | சிதம்பரம் |
| 6 | இரவு 8.00 மணி | கடைவீதி நான்கு முனை சந்திப்பு, காட்டுமன்னார்கோவில், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |

### 31.03.2024, ஞாயிற்றுக்கிழமை

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | தெற்கு ரத வீதி, சிதம்பரம், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |
| 2 | காலை 11.30 மணி | சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு, கடலூர், கடலூர் கிழக்கு மாவட்டம் | கடலூர் |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 3 | மாலை 4.30 மணி | வில்லியனூர் கிழக்கு மாட வீதி சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 4 | மாலை 5.30 மணி | மரப்பாலம் சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 5 | இரவு 6.30 மணி | அண்ணா சதுக்கம், புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |



தி.மு.க. இளைஞர் அணி

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 27–03–2024.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்தியா கூட்டணியின் ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷை ஆதரித்து தாராபுரம் சட்டமன்றத் தொகுதி தாராபுரம் 9வது வார்டுக்குட்பட்ட உப்புத்துறை பாளையம் பகுதிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வீடு வீடாக சென்று மக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் தாராபுரம் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், துணைச் செயலாளர்கள் வி.கமலக்கண்ணன், தவச்செல்வன், பொருளாளர் சக்திவேல் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் – ஆற்றல்மிகு தளகர்த்தர்

# கணேசமூர்த்தி மறைவு துயரத்தைத் தருகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!



**சென்னை, மார்ச் 29- ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் - ஆற்றல்மிகு தளகர்த்தர் கணேசமூர்த்தி மறைவு சொல்லொணாத் துயரத்தைத் தருகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி அவர்கள் மறைந்த செய்தியறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கிய அவர், ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளைத் திறம்பட ஆற்றியவர். பின்னர், அண்ணன் வைகோ அவர்களுடன் இணைந்து பயணப்பட்டார். ஆற்றல்மிகு தளகர்த்தராகச் செயல்பட்ட அவரது இழப்பு சொல்லொணாத் துயரத்தைத் தருகிறது.

அவரது பிரிவால் வாடும் ம.தி.மு.க. தொண்டர்களுக்கும், திராவிட இயக்கப் பற்றாளர்களுக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# தேர்தல் பத்திர ஊழல் - உலகின் மிகப்பெரிய ஊழல்!

## நிர்மலா சீதாராமனின் கணவர் பரகலா பிரபாகர் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, மார்ச். 29 -*

*தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளித்த பரகலா பிரபாகர், வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்தல் என்பது பாஜகவிற்கும், இந்திய மக்களுக்குமான போட்டி என கூறினார். இதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசின் தேர்தல் பத்திர ஊழலே முக்கிய காரணம் என்று அவர் தெரிவித்தார்.*

*தேர்தல் பத்திர ஊழல் உலகின் மிகப்பெரிய ஊழல் என்றும், பா.ஜ.க. குறித்து இந்திய மக்கள் மெல்ல மெல்ல புரிந்து கொண்டு வருவதாகவும், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகலா பிரபாகர் கூறினார்.*

*மேலும் பரகலா பிரபாகர் கூறுகையில் தேர்தல் பத்திர ஊழல் என்பது இந்தியாவிலேயே அல்ல; உலக அளவில் மிகப் பெரிய ஊழல் ஆகும். பா.ஜ.க. இந்திய மக்களுக்கான மோதல் தான் 2024 தேர்தல். பா.ஜ.க. குறித்து தற்போது மக்கள் மெல்ல மெல்ல புரிந்து கொண்டு வருகின்றனர். தேர்தலில் நிச்சயம் பா.ஜ.க.வை இந்திய மக்கள் தோற்கடிப்பர் என்றார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ.த. சதாசிவம்

**மார்ச் 29 (2017)**



ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் டாக்டர் அண்ணா மன்றத்தை துவக்கி, கழகப் பணியாற்ற தொடங்கிய இவர், நெருக்கடிகாலத்தில் 76வது வட்டப் பொறுப்பாளராகவும், பின்னர் ஆயிரம் விளக்கு பகுதி பிரதிநிதி, பகுதி பொருளாளர், மாவட்ட பிரதிநிதி என கழக அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தலைமை நிலைய அலுவலகச் செயலாளராக நியமிக்கப்பட்டு பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

‘இந்து’ நாளிதழில் பணியாற்றியதோடு, இந்து தொழிற் சங்கத்தில் பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும், தமிழ்நாடு மின்சார வாரிய ஆலோசனை குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

“இவரையும் அண்ணா அறிவாலயத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு – இணை பிரியாத அளவுக்கு தலைமைக் கழகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி தமது பிறந்த நாளையொட்டி துணைவியாருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

100 சதவிகித வாக்குப் பதிவை வலியுறுத்த

# விழிப்புணர்வு பணிகள்!

## திருப்பெரும்புதூர் தொகுதியில் நடைபெற்றது!

காஞ்சிபுரம், மார்ச் 29-

நாடாளுமன்ற பொது தேர்தலை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100% வாக்களிக்க வேண்டும் என்பதற்காக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 11.03.2024 முதல் தொகுதி மற்றும் வாக்குச்சாவடி வாரியாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தேர்தல் உறுதிமொழி எடுத்தல், பேனர்கள், போஸ்டர்கள், ஸ்டிக்கர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் வைத்து பிரச்சாரம் செய்தல், பள்ளி மாணவர்களுக்கு கலாச்சார போட்டிகள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கல்லூரி மாணவர்களை ஒன்று திரட்டி தேர்தல் விழிப்புணர்வு பேரணி நடத்துதல், அரசு களப்பணியாளர்களை கொண்டு பொதுமக்களின் வீட்டிற்கே சென்று துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உறுதிமொழி எடுத்தல், மாற்றுதிறனாளிகளுக்கு வீட்டிற்கே சென்று வாக்குபதிவு செய்துவது குறித்து விழிப்புணர்வு அளித்தல், சுயஉதவி குழுக்களை கொண்டு மாவட்ட அளவில் ரங்கோலி போட்டிகள் நடத்துதல் மனித சங்கலி, பைக் பேரணி போன்ற விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - கோவை<br>பொள்ளாச்சி |
| 01.04.2024 (திங்கட் கிழமை) | - திருநெல்வேலி<br>தென்காசி |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - கன்னியாகுமரி |
| 04.04.2024 (வியாழக் கிழமை) | - மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | - சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
*'சென்னை-18.*

**தலைமைக் கழகம்,**
*தி.மு.க.*

# கரூரில் 'இந்தியா' கூட்டணி தேர்தல் பணிமனை திறப்பு!

## அமைச்சர்கள் அர.சக்கரபாணி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

கரூர், மார்ச் 29 -

கரூரில் 'இந்தியா' கூட்டணி தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது. அமைச்சர்கள் அர.சக்கரபாணி, அன்பில்மகேஷ் பொய்யாமொழி முன்னிலை வகித்தனர். செந்தில் பாலாஜி உள்ளே இருக்கும் போதே கரூரில் போட்டியிடாமல் கோவைக்கு அண்ணாமலை ஓடியது ஏன்? அந்த பயம் இருக்க வேண்டும் என அன்பில் பொய்யாமொழி பேசினார்.

கரூரில் இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணியை ஆதரித்து, தேர்தல் பணிமனை கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி, கரூர் கோவை சாலையில் அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. உணவுத் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தேர்தல் பணிமனையை திறந்துவைத்தார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கரூர் மாவட்ட தேர்தல் பொறுப்பாளர், எம்.பி., எம்.எம். அப்துல்லா, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, வேடசந்தூர் காந்திராஜன், கழக தொகுதி பொறுப்பாளர்கள் பணப்பட்டி தினகரன், ப.ராணி, மீனா ஜெயக்குமார், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மாநில நிர்வாகிகள் கரூர் முரளி, முனவர் ஜான், வழக்கறிஞர் விஜயகுமார், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழகச் செயலாளர்கள் முன்னிலை வகித்தனர்.

**அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!**

உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

கடந்த தேர்தலில் 39 தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெற்றது. இந்த முறை 40 தொகுதிகளில் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி.

தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மத்தியில் யாரை பார்த்து கை நீட்டுகிறாரோ அவர் தான் இந்திய நாட்டின் பிரதமர். தமிழகத்தில் கடந்த 34 மாதங்களில் ஏராளமான சாதனை திட்டங்களை தமிழக முதல்வர் தளபதி அவர்கள் செய்துள்ளார். இந்த சாதனைகளை எடுத்து கூறி மக்கள் மத்தியில் வாக்கு சேகரிப்போம்.

கரூரில் காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணி மீண்டும் போட்டியிடுகிறார். கடந்த முறை 4.20 லட்சம் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இம்முறை அதை விட அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். தமிழக முதல்வர் அவர்கள் ஏராளமான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளார்கள்.

ஒன்றிய அரசு கடந்த 10 ஆண்டுகளாக தமிழகத்தை வஞ்சித்து உள்ளது. தமிழகத்தில் இருந்து வரியாக 1 ரூபாய் பெறும் ஒன்றிய அரசு தமிழகத்திற்கு வெறும் 28 பைசா மட்டுமே கொடுக்கிறது. ஆனால் உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் குஜராத் போன்ற மாநிலங்களுக்கு அள்ளி கொடுக்கும் ஒன்றிய அரசு தமிழகத்திற்கு கிள்ளிக்கூட கொடுப்பதில்லை. தமிழக முதல்வர் தளபதி அவர்கள், மாநில இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தேர்தல் பிரச்சாரம் செல்லும் இடங்கள் எல்லாம் மக்கள் மத்தியில் நல்ல எழுச்சி உள்ளது. 40 தொகுதிகளையும் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி.

பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கடந்த தேர்தலில் 521 தேர்தல் வாக்குறுதி அளித்ததாகவும் நிறைவேற்றியவற்றை முதல்வர் வெள்ளை அறிக்கை வெளியிடப்படுமா என கேள்வி எழுப்பியதாக கூறினார்கள. கொரோனா காலத்தில் அனைத்து மக்களுக்கும் ரூ. 4000 ரூபாய் வழங்கியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தர முடியாது என அடம் பிடித்தவர் எடப்பாடி பழனிச்சாமி.

பெண்களுக்கான விடியல் பயணம் திட்டத்தில் 445 கோடி பேர் பயணம் செய்துள்ளனர். கொடுக்கவே முடியாது என கேலி பேசிய நிலையில் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் 1 கோடியே 15 லட்சம் பேர்கள் பயனடைந்துள்ளனர். தமிழத்தில் 31 ஆயிரம் அரசு தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் 17 லட்சம் பேர்கள் பயனடைந்துள்ளனர்.

இன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் 2 லட்சம் உயிர்கள் காப்பற்றப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை விட சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றி மக்கள் பயன் அடைந்துள்ளனர் எதையும் தெரிந்து கொண்டு பேச வேண்டும் வாயில் வந்ததை உளறுவது அவருக்கு வேலை.

இவ்வாறு அவர் பேசினார்.

**அமைச்சர்**
**அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேச்சு!**

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசியது,

கரூர் மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சராக இருந்தவருமான செந்தில் பாலாஜி மீது பழிவாங்கும் நோக்கில் பொய் வழக்கு போட்டு கைது செய்துள்ளனர் ஜாமீன் மறுக்கப்பட்டுள்ளது கடந்த தேர்தலில் அண்ணாமலை அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு செந்தில் பாலாஜியால் விரட்டி அடிக்கப்பட்டவர். தற்போது செந்தில் பாலாஜி வெளியே இல்லாத நிலையில் தைரியம் இருந்தால் அவர் கரூர் எம்பி தேர்தலில் போட்டியிட்டு இருக்க வேண்டும் . ஆனால் செந்தில் பாலாஜி சிறையில் இருக்கும் நிலையில் கூட அவரை பார்த்து பயந்து போய் கோவைக்கு ஓடிவிட்டார். இதுதான் திமுக. செந்தில் பாலாஜி வெளியே இல்லாவிட்டாலும் ஒவ்வொரு தொண்டனும் ஈசல் போல் பறந்து பறந்து தேர்தல் பணியாற்றி காங்கிரஸ் வேட்பாளரை வெற்றி பெறச் செய்வார்கள். தற்போது நடைபெற உள்ள தேர்தலில் மக்கள் ஆதரவு நமது கூட்டணிக்கு அமோகமாக இருக்கிறது. தி.மு.க.விற்கும் யாருக்கும் போட்டி கிடையாது. திமுகவில் இருப்ப இருக்கும் மாவட்ட செயலாளர்கள்அமைச்சர்களில் யார் நமது அணிக்காக நமது வேட்பாளர்களுக்காக அதிக ஓட்டுகளை யார் பெறுவது அதிக ஓட்டுகளை எந்த அமைச்சர்கள் பெறுவது என்பதில் தான் போட்டியே இருக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

கரூரில் இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஜோதிமணி வேட்பு மனு தாக்கல் செய்தார்.

அமைச்சர்கள் அர. சக்கரபாணி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபண்டியன், கரூர் மாவட்ட தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் எம்பி.எம்.எம். அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்த பிறகு கரூர் நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஜோதிமணி செய்தியாளர்களிடம் பேசுகையில்,

தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. பி.ஜே.பி.யின் பி டீமாக செயல்பட்டு வருகிறது.கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் கரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நான், தொகுதி மக்களுக்காக ரூ.500 கோடி நிதியில் திட்ட பணிகள் செய்துள்ளேன். மக்களவையில் கடந்த 70 ஆண்டுகளாக ஒலிக்காத குரலாக தமிழக மக்கள் பிரச்சனை குறித்து குரல் எழுப்பி உள்ளேன்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிற்கு பல்வேறு திட்டங்கள் கொண்டு வந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக கல்விக்கும், மருத்துவத்திற்கும், பெண்கள் முன்னேற்றத்திற்கும் மகத்தான திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இதனால் தேர்தல் பிரச்சாரத்தின் போது அவருக்கு மக்கள் மத்தியில் நல்ல எழுச்சி மற்றும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது.கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழக மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. தமிழகத்தில் பி.ஜே.பி.யின் அடிமையாக பி டீமாக இருந்து வந்த அ.தி.மு.க. கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழக மக்களுக்கு எதுவும் செய்யவில்லை.

அ.தி.மு.க. இனி எப்போதும் அடிமையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற நிலைமையில் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் செந்தில்பாலாஜி அமைச்சராக இருந்தபோது கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி, மணப்பறை ஆகிய 3 தொகுதிகளில் அரசு கலைக்கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளது. கரூரில், வேளாண்மை கல்லூரி கொண்டு வரப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், விசைத்தறி தொழிலாளர்களுக்கு மின் கட்டணம் சலுகை என திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். அமைச்சர்கள் கே.என்.நேரு, அர.சக்கரபாணி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஐ.பெரியசாமி என ஐந்து அமைச்சர்கள் கரூர் மக்களவைத் தொகுதிக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை செய்துள்ளனர். இதை மக்களிடம் சொல்லி ஓட்டு கேட்போம். ஆனால், அதிமுக தம்பிதுரை 10 ஆண்டு தொடர்ந்து எம்பியாக இருந்தும் கரூர் தொகுதி எம்பிக்கு எந்த அலுவலகம் கிடையாது. அவரை நேரில் சந்திக்க முடியாது. தொகுதி மக்களுக்கு அவர்கள் எதுவும் செய்யவும் இல்லை. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தைக் கூட கரூருக்கு கொண்டுவர முடியாத நிலையில் தான் இருந்தனர் நாடாளுமன்றத்திலும் தொகுதி பிரச்சினையை குறித்து வாயை திறப்பதில்லை. இப்போது அதை பேசவோம் இதை பேசுவோம் என்கிறார்கள்.

தைரியம் இருந்தால் பெட்ரோல் டீசலை கேஸ் விலை உயர்வு குறித்து பேசுவார்களா?.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழக மக்களையும் கரூர் தொகுதி மக்களையும் சீரழிவு பாதைக்கு கொண்டு சென்று விட்டனர். மக்களவை தேர்தலில்

இந்தியா கூட்டணி மகத்தான வெற்றி பெறும் என்றார்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் மல்லசமுத்திரம் ஒன்றியம் மற்றும் பேரூர் பகுதிகளில் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி வேட்பாளர் வி.எஸ்.மாதேஸ்வரனை ஆதரித்து, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளரும், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன், ஒன்றியச் செயலாளர் கு.பழனிவேல், பேரூர்ச் செயலாளர் திருமலை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

'இந்தியா' கூட்டணி கழக வேட்பாளர் மலையரசனை ஆதரித்து

# கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தீவிர வாக்குச் சேகரித்தார்!

கள்ளக்குறிச்சி, மார்ச் 29 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.க. வேட்பாளர் மலையரசனை ஆதரித்து வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பொதுமக்கள், கழக நிர்வாகிகள், இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதி சங்கராபுரம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட மூங்கில் துறைப்பட்டு, பொரசப்பட்டு, சவேரியாபாளையம், மைக்கேல்புரம், மேல் சிறுவள்ளூர், மணலூர், பவுஞ்சிப்பட்டு புளியங்கோட்டை, எல்.என்.பட்டி, ரங்கப்பனூர், புதுப்பட்டு, ராவுத்தநல்லூர்,

பிரம்ம குண்டம், வடப் பொன்பரப்பி, வடகீரனூர், உலகளப்பாடி, அருளம்பாடி ஆகிய கிராமங்களில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி தி.மு.க. வேட்பாளர் மலையரசனுக்கு திறந்தவெளி ஜீப்பில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்து ரிஷிவந்தியம் தொகுதியில் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஈடுபட்டார்.

அப்போது பொதுமக்கள் (குறிப்பாக பெண்கள்) கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட அனைவரும் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மலர் தூவி, மாலை அணிவித்து, தாரை தப்பட்டை முழங்க, மேளதாளம் இசைக்க ஆரத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

மேலும் தி.மு.க. வேட்பாளர் மலையரசன் அங்கு கூடியிருந்த பொதுமக்கள், கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளிடம் கைகூப்பி வணங்கி காலில் விழுந்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்கு பொதுமக்கள் உதயசூரியன் சின்னத்தில் நாங்கள் வாக்களிப்போம் என்று கூறி பொதுமக்களும் தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்தனர். அதேபோல் முஸ்லிம்களும் பெரும் திரளாக கலந்து கொண்டு மலையரசனுக்கு தங்களது ஆதரவை தெரிவித்துக் கொண்டனர்.

தொடர்ந்து வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் பேசுகையில், எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பது தான் திராவிட மாடல் அரசின் கொள்கை, திராவிட மாடல் நல்லாட்சியில் ஆட்சி அமைத்த இரண்டரை ஆண்டு காலத்தில் எவ்வளவோ கடன் சுமை இருந்த போதிலும் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் தமிழக மக்களுக்காக கொரோனா நிதி ரூபாய் 4000 வழங்கினார்.

தூத்துக்குடி, சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபாய் 6000 நிதி வழங்கினார்.

அதுமட்டுமில்லாமல் ஒவ்வொரு மகளிருக்கும் கலைஞர் உரிமைத் தொகை ரூபாய் 1000 வழங்கிக் கொண்டு வருகிறார். அரசுப் பள்ளியில் பயின்று மேல்படிப்பு படிக்கும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் 1,000 ரூபாய் வழங்குகிறார். இந்தியாவிலேயே யாரும் செயல்படுத்தாத காலை உணவு திட்டம் நமது தமிழக முதல்வர் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தி வருகிறார். அரசு பேருந்தில் மகளிர் இலவச பயணம் திட்டத்தின் மூலம் ஏழை எளிய வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் பயனடைந்து வருகின்றனர். இதுபோன்ற பல்வேறு திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம். 24 மணி நேரமும் தமிழக மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் நமது கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்திட நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தி.மு.க. வேட்பாளர் மலையரசனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்று தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும், அந்தந்த பகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறியும் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரிப்பில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஈடுபட்டார்.

இந்த நிகழ்வில் சங்கராபுரம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் அசோக் குமார், சங்கராபுரம் அஞ்சலை கோவிந்தன், அஸ்வினி செந்தில்குமார், விஜய் ஆனந்த், தங்க.சிவமலை,

அர்ச்சனா காமராஜன், சித்ரா தாஸ் மற்றும் 'இந்தியா' கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்ட தொ.மு.ச. சார்பில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சிறப்புத் தலைவர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் அஸ்தம்பட்டி உழவர் சந்தை மற்றும் கன்னங்குறிச்சி சாலை பகுதியில் கழக அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு அறிக்கை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் தலைவர் வி.மணி, போக்குவரத்து தொ.மு.ச. தலைவர் ராஜாமணி, பொதுச் செயலாளர் மனோகரன், பொருளாளர் முருகன் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### து. ராமதாஸ்

**மார்ச் 29 (2021)**



தனது இளமை பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

சென்னை மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் பகுதியில் வட்டச் செயலாளராகவும் – மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்..

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ‘கிளம்பிற்றுக்காண் தமிழச் சிங்கக் கூட்டம்’ என கிருஷ்ணன் கோயிலில்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை கேட்கத் திரண்ட மக்கள் வெள்ளம்!














கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.3.2024) விருதுநகர் மாவட்டம், கிருஷ்ணன்கோயிலில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் விருதுநகர் வேட்பாளர் மாணிக்கம் தாகூர், தென்காசி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோரை அறிமுகப்படுத்தி ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, ஜெயபாலன், மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கபாண்டியன், பழனி நாடார், அசோகன், ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார் உள்ளிட்ட முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள் மற்றும் ‘இந்தியா’ கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வாக்குச் சீட்டு தண்டனை!

பாரதிய ஜனதா கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாடு பேரழிவை சந்திக்கும் என எச்சரிக்கை செய்தவர் பரகலா பிரபாகர். நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரான இவர், தனது ‘புதிய இந்தியா எனும் கோணல் மரம்’ என்கிற நூலில் இதை விரிவாகவே பேசியிருப்பார்.

தற்போது தேர்தல் நேரத்தில் பா.ஜ.க. எதிர்ப்புக் குரல் அவரிடமிருந்து மேலும் வலுவாக வெளிப்படுகிறது. “பா.ஜ.க. தேர்தல் பத்திர ஊழல், இந்தியாவின் மிகப்பெரிய ஊழல் மட்டுமல்ல, உலக அளவிலான மிகப்பெரிய ஊழல் என மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட மிகப்பெரிய மோசடி, 2024 நாடாளுமன்றத் தேர்தல் இரண்டு கூட்டணிக் கட்சிகளுக்கான தேர்தல் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவும் பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக உள்ளது” என கூறியுள்ளார். “தேர்தல் பத்திர மோசடியில் பாரதிய ஜனதா அரசுக்கு வாக்காளர்கள் நிச்சயம் தண்டனை அளிப்பார்கள்” என்கிற அவரது எதிர்ப்புக் குரல் இந்தியா முழுவதும் இப்போது வேகமாக பரவி வருகிறது.

தேர்தல் தோல்வி பயத்தில், பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளர்கள் பலரும் பின்வாங்கும் நிலையில், தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு என்னிடம் வசதி இல்லை எனக் கூறியிருக்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். நிறுவனங்களை மிரட்டி ஆறாயிரம் கோடிக்கு மேல் தேர்தல் பத்திரம் திரட்டியிருக்கிறார்கள் என்கிற உண்மைகள் வெளிவந்த பின்னும், மக்களை ஏமாற்ற தந்திரமாக பேசுகிறார் நிர்மலா சீதாராமன். ஆனால், அவரது கணவர் சொல்வது போல மக்கள் நிச்சயம் வாக்குச் சீட்டில் தண்டிப்பார்கள்.

## ஃப்ளாஷ்பேக்



தமிழ்ப்பித்தன்



### உந்துதல் தந்த உரை!

1987 ஆம் ஆண்டு, இளைஞர் அணி செயலாளராக இருந்த, இன்றைய கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்துக்குப் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காகச் சுற்றுப்பயணம் செய்தார். கிணத்துக்கடவு நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது நான் கிணத்துக்கடவு ஒன்றிய தி.மு.க இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தேன். அந்தக் கூட்டத்தில் தளபதி அவர்களின் உரை அப்போது 24 வயது இளைஞனான எனக்கு பெரும் ஊக்கத்தை அளித்தது.

**–தமிழ்ப்பித்தன், தலைமைக் கழகப் பேச்சாளர், கிணத்துக்கடவு, கோவை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ‘முத்தமிழறிஞர்’ கலைஞர்!

1989-ஆம் ஆண்டு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் கலைஞருக்கு ‘ராஜராஜன் விருதை’ அறிவித்தது. ‘தென்பாண்டிச் சிங்கம்’ நாவலுக்காக இந்த விருது வழங்கப்பட்டது. அன்றைய குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா, ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா ஆகியோர் விருதுடன், ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசையும் வழங்கினர். அப்போதுதான் ‘முத்தமிழறிஞர்’ என்ற சிறப்புப் பட்டமும் கலைஞருக்கு வழங்கப்பட்டது. ஒரு லட்சம் ரூபாயையும் அஞ்சுகம் அம்மாள் கல்வி அறக்கட்டளை தொடங்க, பல்கலைக்கழகத்துக்கு திருப்பிக் கொடுத்தார் கலைஞர்.

## சீரணி → இளைஞர் அணி

4

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

# அரசியல் நோக்கமற்ற அணி!



ஓவியம் : ரவி பேலட்

பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் 1967 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதன்முறையாக ஆட்சியில் அமர்ந்தது. அடுத்து வந்த ஜூன் மாதத்தில் தனது முதல் நிதிநிலைத் திட்டத்தை சட்டமன்றத்தில் வைத்தது கழக அரசு.

அப்போது அண்ணா, “பல துறைகளிலும் மக்களின் தேவைகளை இயன்ற அளவு நிறைவேற்றும் வகையில், இவ்வாண்டின் திட்டத்தினை உருவாக்கியிருக்கிறோம். நாட்டிலே ஒரு புதிய சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதாது; அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது; சமூகம் முழுவதும் எழுச்சி பெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, ‘புதிய நிலையினை உருவாக்க வேண்டும்’ என்ற ஆர்வம் கொள்ளவேண்டும்.

‘இந்த ஆர்வம் கொண்டோர் பல்லாயிரவர் உளர்’ என்ற நம்பிக்கையுடன்– துவக்கக் கட்டமாக –மாவட்டத்துக்கு ஆயிரம் பேர் கொண்ட ஒரு ‘சீரணி’யை அமைத்திடும் திட்டத்தை மேற்கொள்ள அரசு முடிவு செய்திருக்கிறது. இந்தச் ‘சீரணி’ எந்தவிதமான ஊதியமும் பெறாமல், அரசிடமிருந்து தேவையான கருவிகள், செயல்படு முறைகள் ஆகியவற்றினை மட்டும் பெற்று, ஏரி குளங்களைச் செப்பனிடுதல், பாதைகளைச் சீர்செய்தல், தரிசுகளை விளைநிலமாக்கிட வழிகாணல், முதியோர் கல்வி போன்ற தொண்டுகளில் தமது ஓய்வுநேரத்தை ஈடுபடுத்தும். தொழில்நுட்பத் துறையின் பல்வேறு பிரிவைச் சார்ந்த அலுவலர்கள், இந்தச் ‘சீரணி’க்கு வேண்டிய முறையில் வழிகாட்டித் துணை செய்வர்”. என்று அறிவித்தார்.

**ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பின்னர் இதைச் செய்திருப்பதற்குக் காரணம் மக்கள் நலப்பணிக்காகத்தான்..!**

சீரணி குறித்து சட்டமன்றத்திலேயே அறிவிப்பு செய்தவுடன், எதிர்க்கட்சிகள் எதிர்த்தன. விமர்சனங்களை வீசின. அவற்றுக்கு கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றும்போது அண்ணா சொன்ன பதில் இது:

“சீரணி என்றதுமே சிலருக்கு, ‘செங்காவலர் படை’ நினைவுக்கு வந்துவிட்டிருக்கிறது. ‘இங்கே செங்காவல் படையை உருவாக்காதீர்கள்’ என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொன்னவர்கள் சீனாவைப் பற்றித் தெரிந்து கொள்ளவில்லை.

சீரணிக்கு அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது. இத்தகைய சீரணியில் மாணவர்கள் சேர்ந்து உழைப்பதன் மூலம் அரசு செய்யக் கூடியதைக் காட்டிலும் மக்களுக்கு அதிக நன்மைகளைச் செய்ய உங்களால் இயலும்.

நேரு இத்தகைய பொதுநலத் தொண்டு குறித்து, கனவு கண்டார். 20 வருடமாக மக்கள்தான் உழைத்திருக்கிறார்கள். காரணம் தெரியாமலே உழைத்திருக்கிறார்கள். யாருக்காக உழைக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே உழைத்திருக்கிறார்கள். பலனென்ன என்று தெரியாமலே உழைத்திருக்கிறார்கள். நமக்காக நம் குடும்பத்துக்காக உழைக்க வேண்டும். மீதமிருக்கும் நேரத்தில் ஊர் நன்மைக்காக உழைக்க வேண்டும்.

இருவண்ணக் கொடியைக் கையில் பிடித்து ‘திராவிட முன்னேற்ற கழகம் வாழ்க! திராவிட முன்னேற்றக் கழகம் வளர்க’ என்று குரலெழுப்பிச் செல்வதற்காகச் சீரணிப் படை அமையவில்லை. இப்படையைக் கொண்டு தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் தி.மு.கழகம் இல்லை. அப்படியென்றால், 1966–இல் அல்லவா இதனை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பின்னர் இதைச் செய்திருப்பதற்குக் காரணம் மக்கள் நலப்பணிக்காகத்தான்..!”

அப்படித்தான் சீரணி உதித்தது.

...வெற்றிநடை போடும்.

## பொய்ப்பெட்டி

4

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”**

# ஸ்டிக்கர் ஒட்டும் மோடி!

***அண்ணாமலை முதல் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வரை பா.ஜ.க.வினர் எல்லாரும் கோரஸாக சொல்கிற பொய் என்னவென்றால், ‘தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கெல்லாம் ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் நிதி தருகிறது. அதில் தி.மு.க. தன்னுடைய ஸ்டிக்கரை ஒட்டிக் கொள்கிறது’ என்பதுதான். உண்மையில் ஸ்டிக்கர் ஒட்டுவது யார்?***

மோடி வீடு, மோடி பைப், மோடி டாய்லெட் என்றெல்லாம் பா.ஜ.க.வினர் யார் பணத்தில் ஸ்டிக்கர் ஒட்டுகிறார்கள்?

பிரதம மந்திரி பெயரிலான வீடு கட்டும் திட்டம் என்பது 1970– ஆம் ஆண்டு முதல், இந்திரா காந்தி அம்மையார் காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. நகர்ப்புறம், கிராமப்புறம் என இருவகை வீடு கட்டும் திட்டங்கள் உண்டு. ஆண்டு வருமானம் 3 லட்சத்துக்குக் குறைவாக உள்ளவர்கள் விண்ணப்பித்துப் பயனடைய முடியும்.

**‘ஸ்டிக்கர் பாய்’ மோடி அரசு, தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் ஒன்றிய அரசின் திட்டங்களுக்கும் உத்தரபிரதேசம் போன்ற பா.ஜ.க ஆளும் மாநிலங்களுக்கும் ஸ்டிக்கர் ஒட்டுகிறது என்பதுதான் உண்மை.**

கிராமப்புறத்தில் வீடு கட்டத் தேவையான நிலப்பரப்பு 269 சதுர அடி. தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் கட்டப்படும் வீடுகளுக்கான மொத்த மதிப்பீடு 1 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய். இதில் ஒன்றிய அரசு தருகிற நிதி 72 ஆயிரம் மட்டும்தான். மாநில அரசின் நிதி 48 ஆயிரம் ரூபாய். இது போதாது என்பதால், மேற்கூரை அதாவது கான்க்ரீட் போட மாநில அரசு கூடுதலாகக் கொடுக்கும் நிதி 50 ஆயிரம் ரூபாய். அதாவது 48,000+50,000 என 98 ஆயிரம் ரூபாயை மாநில அரசு வழங்குகிறது. ஒன்றிய அரசு வழங்குவது வெறும் 72 ஆயிரம் ரூபாய். அப்படியென்றால் மோடி வீடு என்பது வெறும் ஸ்டிக்கர்தானே..!





இதுபோல நகரப்புறங்களில் 350 சதுர அடியில் கட்டப்படும் வீட்டுக்கான மொத்த மதிப்பீடான 16 லட்சம் ரூபாயில் ஒன்றிய அரசு தருவது 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். மாநில அரசு தருவது 7 லட்ச ரூபாய். பயனாளிகளின் பங்காகவும், இதர செலவாகவும் உள்ள தொகை 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். இதையும் மோடி வீடு என்று ஸ்டிக்கர் ஒட்டுகிறது பா.ஜ.க.

மோடி பைப் என்கிற கிராமப்புற வீடுகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் வழங்குகிற ‘ஜல்ஜீவன்’ திட்டத்தை எடுத்துக்கொண்டால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஒன்றிய அரசின் நிதியுதவி 44.5 சதவீதம் மட்டுமே ஆகும். மாநில அரசின் பங்காக சென்டேஜ் உட்பட 55.5 சதவீதம். ஆனால், பெயர் மட்டும் மோடி பைப்.


‘ஸ்டிக்கர் பாய்’ மோடி அரசு, தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் ஒன்றிய அரசின் திட்டங்களுக்கும் உத்தரபிரதேசம் போன்ற பா.ஜ.க ஆளும் மாநிலங்களுக்கும் ஸ்டிக்கர் ஒட்டுகிறது என்பதுதான் உண்மை.

...வினா தொடரும்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

432

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131